# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 327 ஐப்பசி 05 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 22 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்

# நீதிமன்றில் முற்படுமாறு ஞானசாரருக்கு கட்டளை

## மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுப் பிறப்பித்தது

யாழ்ப்பாணம், ஒக்.22

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில், நீதிமன்றக் கட்டளையை உதாசீனப்படுத்திப் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்ட விவகாரத்தில், கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் இரு பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டது. 23

# கோத்தா வந்தால் இரத்த ஆறு ஓடும்

*தமிழ், முஸ்லிம் மக்களே சிந்தித்து வாக்களியுங்கள் என்கிறார் சஜித்*

கொழும்பு, ஒக்.22

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும். தமிழ், முஸ்லிம் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் வேட்பாளர் சஜித் பிரேமதாச.

பன்னாட்டுச்செய்தி நிறுவனமொன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியில் 'தமிழ்க் கட்சிகள் எனக்கு ஆதரவு வழங்காவிட்டாலும், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வேன்' 23

# தேர்தலை கண்காணிக்க 15 ஆயிரம் பேர் களத்தில்

கொழும்பு, ஒக்.22

நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலுக்கான கண்காணிப்பில் ஏறத்தாழ 15 ஆயிரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தமது அமைப்பின் சார்பில் 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

2 ஆயிரம் கண்காணிப்பார்களை இந்த முறை அரச தலைவர் தேர்தலில் ஈடுபடுத்தவுள்ளோம் என்று தேசிய தேர்தல்கள் கண்காணிப்பகம் குறிப்பிட்டது.

கபே அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி 7 ஆயிரத்து 500 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக் 23

## உள்பெட்டி தகவல்களும் கண்காணிப்பு

கொழும்பு, ஒக்.22

இலங்கையில் முகநூல் பயனாளர்களால் உள்பெட்டியில் (இன்பொக்ஸ்) பரிமாறப்படும் தகவல்களும் தற்போது கண்காணிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முகநூல் நிறுவனத்தின் இலங்கைக்கான கொள்கைத் திட்ட முகாமையாளர் யசாஸ் அபேவிக்ரமவை மேற்கோள் காட்டிக் கொழும்பு ஊடகம் ஒன்று இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் போலிச் செய்திகள், இனவாதக் கருத்துக்கள் பரப்பப்படுவதைத் தடுப்பது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு சமூக ஊடகநிறுவனங்களுடன் பேச்சு நடத்தியிருந்தது. தற்போது இந்தத் தகவலும் வெளியாகியுள்ளது.


அதேவேளை, முகநூல் நிறுவனம் முதல்முறையாக இலங்கையர் ஒருவரை கொள்கைத் திட்ட முகாமையாளராக நியமித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வானூர்தி நிலைய சுற்றாடலில் தேங்கும் நீரை சேமிக்க திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தைச் சூழ உள்ள பகுதிகளில் தேங்கும் நீரை வெளியேற்றிக் கடலுக்குச் செல்வதைத் தடுத்து சிறப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளத்தைச் சூழ மழை காலத்தில் நீர் தேங்குகின்றது. நீரை வெளியேற்றி கடலுடன் சேர்ப்பிப்பதற்குக் கால்வாய் அமைக்கத் 23



# கூட்டமைப்பு முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்கோம்

## மகிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஒக்.22

அரச தலைவர் தேர்தலுக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனைகளை முன்வைக்கவுள்ளதாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த நிபந்தனைகளையும் நாங்கள் ஏற்கமாட்டோம். எமக்கு நாடும் நாட்டின் இறையாண்மையும் முக்கியம்.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜ 23

# தனிமையில் வாழ்ந்த பெண் கழுத்தில் வெட்டிக் கொலை

## கோண்டாவிலில் கொடூரம் பொலிஸ் தீவிர விசாரரணை



யாழ்ப்பாணம், ஒக்.22

கோண்டாவில், நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே வீடொன்றில் தனியாக வாழ்ந்த பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். 23

# தமிழ்க்கட்சிகள் முன்வைத்துள்ள பல கோரிக்கைகள் சரியானவை!

## வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்கோம் என்கின்றது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, ஒக்.22

அரச தலைவர் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 13 கோரிக்கைகளில் பல நியாயமானவை. அவற்றை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கையை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலைமுன்னணித்தலைமை அலுவலகத்தில் அந்தக் கட்சி 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

see more news in NEWUTHAYAN.COM

# குருப்பெயர்ச்சி பலன்கள்! 2019 — 2020

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,



**தனது எண்ணங்களில் விடாப்பிடியாக இருந்து இறுதியில் வெற்றி காணும் கடக ராசி அன்பர்களே,**


தொலைதூரச் சிந்தனையுடைய நீங்கள், நாளை நமதே என்ற நம்பிக்கையுடன் எதையும் செய்பவர். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் நீங்கள், எதிரிகளையும் சிந்திக்கவைக்கும் செயல்திறன் கொண்டவர்கள்.

உங்களின் ராசிக்கு 5ஆம் வீட்டில் அமர்ந்து உங்களின் வருங்கால திட்டங்களை நிறைவேற்றிய குரு பகவான் 29.10.2019 முதல் 13.11.2020 வரை ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைகிறார். சகட குரு சங்கடங்கள் தருவாரோ எனக் கலங்கவேண்டாம். குரு பகவான் ஆட்சிபெற்று அமர்வதால் நல்லதே நடக்கும்.

வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். மற்றவர்களை நம்பி இருக்காமல் தன் முயற்சியால் என்ன முடிகிறதோ அதைச் செய்து முன்னேறுவீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் இருக்கும்.

கணவன் மனைவி பரஸ்பரம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சிலர் பூர்வீக சொத்தை விற்றுவிட்டு நகரத்தை ஒட்டியுள்ள புறநகர் பகுதியில் குடியேறுவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். உதவி செய்கிறேன் என்று சொல்லியிருந்தவர்கள் உங்களுக்கு உதவாமல் போகக்கூடும். எனவே மாற்றுவழியை யோசித்து வையுங்கள்.

நீங்கள் சிரித்தால் உலகமும் சிரிக்கும், நீங்கள்



கோபப்பட்டால் உலகமும் கோபப்படும் என்பதை மறந்துவிடாதீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குரு பகவான் குடும்ப ஸ்தானத்தைப் பார்ப்பதால் பணவரவு உண்டு. குடும்பத்தில் நிம்மதி உண்டு. அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பழைய நகையை மாற்றி புது டிசைனில் ஆபரணம் வாங்குவீர்கள். வாகனத்தைச் சீர் செய்வீர்கள். மகளுக்குத் திருமணம் நிச்சயமாகும். மகனின் அலட்சியப் போக்கு மாறும்.

குரு 10 ஆம் வீட்டைப் பார்ப்பதால் புதிய இடத்தில் வேலை கிடைக்கும். தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். கடினமான வேலைகளையும் எளிதாக முடிக்கும் சக்தி கிடைக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். குரு 12 ஆம் வீட்டைப் பார்ப்பதால் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். சுபசெலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நீண்ட நாள்களாகப் போக நினைத்த புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

29.10.2019 முதல் 31.12.2019 வரை உள்ள காலகட்டங்களில் குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். புதிய முதலீடுகள் செய்து சொந்தமாகத் தொழில் தொடங்குவீர்கள். அயல்நாட்டிலிருக்கும் உறவினர், நண்பர்களால் ஆதாயமடைவீர்கள்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்களின் சுகஸ்தானாதிபதியும் லாபாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் இக்காலக்கட்டத்தில் தாயாரின் உடல்நிலை சீராகும். தாய்வழிச் சொத்துகள் கைக்கு வரும். புகழ் பெற்றவர்கள் நண்பர்களாவார்கள். மூத்த சகோதர வகையில் ஆதரவுப் பெருகும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். திருமணம், சீமந்தம் போன்ற சுபநிகழ்ச்சிகளாலும், விருந்தினர்களின் வருகையாலும் வீடு களைகட்டும்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் உங்கள் தனாதிபதி சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1ஆம் பாதத்தில் செல்வதால் எதிர்பார்த்த வகையில் பணவரவு உண்டு. இங்கிதமாகப் பேசி முக்கிய காரியங்களை முடிப்பீர்கள்.

**மகரத்தில் குரு பகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 7ஆம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் உங்களுடைய திறமைகள் வெளிப்படும். தள்ளிப்போன அரசு வகை காரியங்கள் விரைந்து முடியும். நட்புவட்டம் விரிவடையும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:**

7.7.2020 முதல் 30.7.2020 வரை உள்ள காலகட்டத்தில் உத்திராடம் 1 ம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. வீடு கட்ட அரசாங்க அனுமதி கிடைக்கும். பொது விழாக்கள், சுபநிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். 31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால், இந்த கால கட்டத்தில் வீண் அலைச்சல், தர்ம சங்கடமான சூழ்நிலைகள் உருவாகும். முன்னெச்சரிக்கையானிருப்பது நல்லது.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரத்தில் அதிரடி மாற்றங்கள் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். வேலையாள்கள் முரண்டு பிடிப்பார்கள். தொழில் போட்டிகள் அதிகமாகும். பழைய நிறுவனங்களைக் காட்டிலும் புதிய நிறுவனங்களின் பொருட்களை விற்பதன் மூலமாக அதிக ஆதாயமடைவீர்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**

உத்தியோகத்தில் சக ஊழியர்களின் விடுமுறையால் வேலைச்சுமை அதிகமாகும். பதவி உயர்வு தாமதப்படும். புது உத்தியோக வாய்ப்புகள் வந்தாலும் பொறுத்திருந்து செயல்படுவது நல்லது.

**பெண்களுக்கு:**

பெண்கள் உயர் கல்வியில் சாதிப்பார்கள். பழைய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பெற்றோருடன் இருந்து வந்த கருத்துமோதல் நீங்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவ, மாணவிகள் யோகா, தியானம் செய்து நினைவாற்றலை அதிகப்படுத்துங்கள். உயர்கல்வியில் விளையாட்டுத்தனம் வேண்டாம். நுழைவுத் தேர்வு, போட்டித் தேர்வுக்கு முழுநேரம் ஒதுக்கி தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

**கலைத்துறையினருக்கு:**

கலைத்துறையினர் தங்களுக்கு வரவேண்டிய சம்பளத்தைப் போராடி பெறுவார்கள். மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்கங்களைக் கற்றுத் தெளிவீர்கள். இந்த குரு மாற்றம் செலவுகள், அலைச்சல்களைத் தந்தாலும் வெற்றியையும் தரும்.

## பரிகாரம்:

குரு பகவானின் சஞ்சாரம் சாதகமாக இல்லாத காரணத்தால் வியாழக்கிழமைகளில் உங்களது குல தெய்வத்தை வாசனை மிகுந்த மஞ்சள் நிற பூக்களை கொண்டு அர்ச்சனை செய்வது வாருங்கள். அது நன்மை தரும். அதே போல, நெய் விளக்கு ஏற்றி வாருங்கள். பௌர்ணமியில் அம்பாளை வழிபட்டு வாருங்கள்.

வணங்க வேண்டிய தெய்வம் : அம்பாள்
ராசியான திசை: வடகிழக்கு
ராசிக்கல்: முத்து
ராசியான கிழமை: திங்கள்
ராசியான நிறம் : வெள்ளை
ராசியான எண்கள் : 1,2,3,9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரண அறிவித்தல்

## பொன்னையா படைவீரசிங்கம்

**(ஓய்வுபெற்ற மின்வாசிப்பாளர்)**



**பிறப்பு**
**05.12.1931**

**இறப்பு**
**19.10.2019**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா படைவீரசிங்கம் 19.10.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஓய்வுபெற்ற ஆசிரியை காலஞ்சென்ற பாறுபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கனடாவைச் சேர்ந்தவர்களான பரமேஸ்வரி (மணி), நாகேஸ்வரி (சின்னமணி), பாலசிங்கம், ஜெகதீஸ்வரி(குணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சந்திரா, ரதி (நுணாவில்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் கனடாவைச் சேர்ந்த லோகேஸ்வரன், ஆனந்தமணி, சறோஜாதேவி, உருத்திரநாதன் மற்றும் இரத்தினராசா, சிறீஸ்கந்தராஜா (நுணாவில்) ஆகியோரின் மைத்துனரும் கனடாவைச் சேர்ந்த ரூபன், சாந்தி, கவிதா, ரதி, துர்க்கா, அர்ச்சனா, கஜானன், அஸ்வினி ஆகியோரின் மாமனும் சபேஸ், சதீஸ் (கனடா), மணி (அம்பன்) ஆகியோரின் சிறிய தந்தையும் கனடாவைச் சேர்ந்த தயாளினி, சதீஸ்குமார், கவிதன், தீபன், கௌசிகா, ஹரிகரன், ஷாபா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் கனடாவைச் சேர்ந்த அரோஜினா, அஸ்வித்தா, அனிக்கா, ஆஹரசன், லக்ஸ்மன், காயத்திரி, ரவீனா, மீரா, கௌதம், மோனிஷா, தீபன் (லண்டன்), மாறன் (கனடா), சீலன், ஹேமா, கேபிகா (அம்பன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மணி : 416 744 2842/ சின்னமணி - 437 224 2033**
**பாலா : 416 519 2855/ குணம் - 416 665 6497**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் உவகை பொங்கிட தித்திக்கும் இனிய தீபாவளியை

ABI Fashion World

இம்முறை அபிபஷன் வேல்ட் உடன் கொண்டாடுங்கள்.

அனைவரும் விரும்பும் அனைத்து ஆடைகளும் ஒரே இடத்தில்

அபி பஷன் வேல்ட் இன்

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு அனைத்து ஆடைகளுக்கும் 30% வரை சிறப்பு விலைத்தள்ளுபடி

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

திருமணப்பட்டுப்புடவைகளுக்கென்றே ஒரு பிரத்தியேகமான காட்சியறை.






112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738

உதயன் விளம்பர தொடர்புக்கு advt@uthayan.com, 021 493 1111

## சேவை நலன் பாராட்டு (22.10.2019)



யாழ். போதனா வைத்தியசாலையில் 37 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும் பொறுப்புத்தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன்ஓய்வுபெற்றுச்செல்லும் திருமதி **விமலேஸ்வரி சிறீகாந்தன்** அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச்சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



## சாந்தகுமார் அஸ்வின்

யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி பயிலும் **சாந்தகுமார் வசந்தினி** தம்பதியினரின் செல்வப் புதல்வன் **அஸ்வின்** 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் **157 புள்ளிகள்** எடுத்து சித்தி எய்தியமைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செல்வபவனம், கே.கே.எஸ். வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

வாழ்த்துவோர்:
தாத்தா - செல்லத்துரை குடும்பத்தினர்.

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம்
09 . 09 . 1948

மறைவு
22 . 10 . 2018



## அமரர் உயர்திரு. சிறில் சுகந்தரன்

***(JP சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற அதிபர்)***

*கருணைக் கடலான இறைவா ! உம்முடைய வான் வீட்டில் ஓய்விற்காக அழைக்கப்பட்ட சிறில் சுகந்தரன் அவர்களின் ஆன்மாவை உம்முடைய கருணைக் கரங்களால் காத்தருளும் !*

அன்னாரின் இல்லத்தில் 22.10.2019 (செவ்வாய்க்கிழமை) அன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாலை 05.00 மணிக்கு சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

***இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.***

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 9788 727

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(CS 28850)(7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 05 . 1957

மறைவு
17 . 10 . 2019



## திருமதி சுகந்திமலர் கமலநாதன்

(சுகந்தா)

(முன்னாள் ஆங்கில ஆசிரியை Blue Mendhal மகாவித்தியாலயம், கொழும்பு, Administrative Officer DWP - UK)

மானிப்பாய், சங்குவேலியை பிறப்பிடமாகவும், London, Tooting ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்திமலர் கமலநாதன் (சுகந்தா) கடந்த 17.10.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - கனகம்மா தம்பதிகளின் மருமகளும், கமலநாதனின் பாசமிகு மனைவியும், Dr.சுவேதா, நிஷாந்தன் (Charted Accountant) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr. தர்ஷன், ரேவதி (Accountant) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஹானின் அன்பு அம்மம்மாவும், திருமதி பரிபூரணம் பத்மநாதனின் பெறாமகளும், ஜீவமலர், ஜெயமலர், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராசலிங்கம், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தயாரூபி, ரகுநாதன், கோகுலநாதன், புனிதவதி, திலகவதி, பரமநாதன், விமலநாதன் ஆகியோரின் மைத்துனியும், ஜீவரேகா, வரூஜிகா, வரூஜன் (லண்டன்), ஜெறுசி, சாருகன் (சுவிஸ்) ஆகியோரின் சித்தியும், சீருதனின் (கனடா) அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2019) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(CS/28850)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு
24 . 10 . 1937

இறப்பு
20 . 10 . 2019

# சரவணமுத்து தர்மலிங்கம்

**(சம்மாட்டியார்)**

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தர்மலிங்கம் 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊறணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0771641853** (cs.28849)(13.17)



# க.ம. இராஜேந்திரன் (J.P)

**(ஓய்வுபெற்ற கணக்காளர்)**

சங்குவேலி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கேண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட க.ம.இராஜேந்திரன் J.P (ஓய்வுபெற்ற கணக்காளர்) நேற்று (21.10.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் ஆத்திகன், தர்ஷிகா(பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம் வடமாகாணம்), அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல் : குடும்பத்தினர்**

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 09, மலர்மகள் வீதியில் 30/10, 30/11 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனங்கள் ஆறுமுகம் லோகராசாவும் பெண் மங்கையற்கரசியும் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் அரியாலை மலர்மகள் வீதி, நாகமணி நடராசாவும் சிவகாமி சிவலோகநாதனும் பெண் பரமேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் மகாதேவா முகதாவில் 6566 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அதே ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் லோகராசாவும் பெண் மங்கையற்கரசிக்கும் சொரியலாக நில.பர.1 விஸ்தீரணமான ஆதனத்தினை விற்பனை செய்ததாக 1981 ஆவணி 01 ஆம் திகதி அறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் இல 9/8 மலர்மகள் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் ஆறுமுகம் லோகராசா பெண் மங்கையற்கரசி தங்கள் அற்றோனித்தத்துவக்காரன் செல்லையா யோகேஸ்வரன் N.I.C 56171926V என்ற அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவர் மூலம் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 499 ஆம் இலக்கத்தில் 22.02.2018 ஆம் திகதி நிறைவேறிய வெளிப்படுத்தல் மூலம் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விவரிக்கப்படுகின்ற ஆதனம் பல்வேறு சொரியல் ஆதனப்பங்குகளினை உள்ளடக்கி வெளிப்படுத்தப்பட்டுப் பல வருடங்களாக தங்களின் கட்டுப்பாட்டில் காணப்படாமையினால் ஆட்சியுரிமைச்சட்டம் பிரிவு 3 இன் கீழ் ஆட்சியுரிமையினைப் பெற்றுவிட்டோம் என வெளிப்படுத்திள்ளார். பின்னர் இல 9/8 மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் ஆறுமுகம் லோகராசா பெண் மங்கையற்கரசி தனது தத்துவக்காரன் இல 9/8 மலர்மகள் வீதி அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா யோகேஸ்வரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 782 ஆம் இலக்க 21.01.2019 ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் பேரம்பலம் இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினிக்கு அறுதியாக விற்பனை செய்துள்ளார்.

**ஆதன விவரம் :-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகரசபை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு சுண்டுக்குளி கோவிற்பற்று அரியாலை இறை J/95 கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ள மடத்துவளவும் மறுபிரிவுகளும், நில.3 குளி 12 ¾ இது நில அளவையாளர் ஏ.கந்தசாமி 2017.12.27 ஆம் திகதி அளந்து தயாரித்த 5012 இலக்கப் படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நில. பர.3 குளி 15.73 இந்த நிலப்பரப்பு மூன்று குளி பதினைந்து தசம் எழுபத்திமூன்று எல்லை.

**கிழக்கு :- ஒழுங்கை**
**வடக்கு :- பரமநாதன் பெண் வரதாம்பிகையினதும் சண்முகராஜா பெண் மௌனாம்பிகையினதும் ஆதனங்கள்**
**மேற்கு :- ஞானவைரவர் கோயில் ஆதனம்**
**தெற்கு :- மார்க்கண்டு விஜயராஜாவினதும் கலைராஜ் பெண் வசந்தியினதும் ஆதனங்கள்**

தற்போது இவ்வாதனத்தை பே.இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினி தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பே.இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினி என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**(இம்மானுவல் ஆனல்ட்)**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை**

(IN/11512)(11.17)

## மரண அறிவித்தல்

# தணிகாசலம் சிவஞான இந்திரன் ( இந்திரன்)

**( ஓய்வுபெற்ற கட்டடத் திணைக்கள அலுவலரும், கொழும்பு கிருலப்பனை சுப்பர்மார்க்கட் "திருப்பதி ஸ்ரோர்ஸ்" உரிமையாளரும்)**



பிறப்பு 27.04.1950
இறப்பு 20.10.2019

வத்திராயன் தெற்கு மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும், புலோலி மத்தி ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் சிவஞான இந்திரன் 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தணிகாசலம் - கோணாத்தபிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற ஆறுமுகம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், கருணேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலமுரளி (லண்டன்), அச்சுதன் (மாலைதீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவஞான ஈஸ்வரன், சிவஞான ஐங்கரன், சிவஞான ஆனந்தன், அருந்ததி, திருநாவுக்கரசு, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமதேவன், கந்தையா, இரவீந்திரநாதன், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, ஆழ்வாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2019) புதன்கிழமை காலை 8 மணியளவில் ஆத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆத்தியடி,**
**பருத்தித்துறை.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(ANE/995)(11.17)

**077 901 2475, 077 656 2674**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அ.சிற்றம்பலம் ஞாபகார்த்த நிதியம் அனுசரணையுடன்
ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம நலன்புரி நிலையம் நடத்தும்

## கைதடி நாவற்குழிப் பிரதேச 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவித்தல்

**இடம்** : அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய மண்டபம்
**காலம்** : 23.10.2019 புதன்கிழமை மாலை 3.30 மணி
**தலைவர்** : திருமதி சிவலோஜினி கிருஷ்ணமூர்த்தி M.A.
(ஸ்ரீசச்சிதானந்த நலன்புரி நிலைய கல்வி பகுதி பொறுப்பாளர்)

**வரவேற்புரை**: நா.சிவதிருச்செந்தூர்நாதர்
(செயலாளர், நலன்புரி நிலையம்)
ஆச்சிரம கடந்த கால மீள் பார்வை: சி.மதீசன், B.B.A
ஆச்சிரமம் நலன்புரி நிலைய சிந்தனைகள்: மு.பத்மரூபன் B.A.

**கௌரவ விருந்தினர்**: புஸ்பராஜா சிவகண்ணன் (கனடா)

**பிரதம விருந்தினர்**: சி.பவளகுமாரன்
(அதிபர், யா/நாவற்குழி மகா வித்தியாலயம்)

**சிறப்பு விருந்தினர்**: திருமதி புனிதவதி வரதராஜா
(அமரர் சிற்றம்பலம் அவர்களின் சகோதரி)

**சரியை, கிரியை, யோகம், ஞானம்**: இ.குழந்தைவடிவேலு J.P.
(தலைவர், ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமம் நலன்புரி நிலையம்)

**நன்றியுரை**: க.பார்த்தீபன் (நலன்புரி நிலைய பொருளாளர்)

**புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை கௌரவித்தல்**
*அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.*
*அன்பே சிவம்*

**நா.சிவதிருச்செந்தூர்நாதர்,**
**செயலாளர்.**
**கைதடி.** (CS/2954)

## நல்லூர் பிரதேச சபை
## வழங்குனர்களை பதிவு செய்தல் - 2020

சபையானது 2020 ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**
1.காகிதாதி எழுதுபொருட்கள்
2.அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
3.சித்த மருத்துவ மருந்துகள்
4.நூலகங்களுக்கான நூல்கள்
5.துணி வகைகள்
6.கட்டட பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பிவகைகள்)
7.கற்கள், மணல்
8.தீந்தை வகைகள் (paints) நிறம் தீட்டும் பொருட்கள்
9.நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10.வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11.மின்வழங்கு பொருட்கள்,மின்பாவனை பொருட்கள்
12.எரிபொருட்கள், உராய்வு நீக்கி
13இரும்பு பொருட்கள்
14.தீராந்திகள்,பலகைகள்,சட்டங்கள்
15.பனைமரங்கள், சலாகைகள்
16.வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
17.கணினி,பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18.சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
19.பாதணிகள், தோல்பொருட்கள், மழைஅங்கிகள்
20.அலங்காரப்பொருட்கள்
21.இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**
1.அச்சிடுதல்.பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2.மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
3.வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
4.ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
5.கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
6.மின்சாதனங்கள் திருத்தம் , மீள மின் வலுவூட்டல்
7.இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
8.வாகனங்கள் சுத்திகரிப்பு
9.கோலவுடை தைத்தல்
10.கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11.இறப்பர் முத்திரை தயாரித்தல்
12.வீதி விளக்குகள் பொருத்துதல்
13.மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
14.வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
15.கழிவகற்றல் சேவை(Gully emptier service)

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2020" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் 13.12.2019 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை.**

# அசைபோடும் கங்காரு

வயிற்றில் பையுடைய இந்தப் பாலூட்டிகங்காரு ஆகும். ஆஸ்திரேலியா கண்டத்திலும் நியூ கினியா பிரதேசத்திலும் அதிகம் காணப்படுகின்றன.

## விழிநீர் அஞ்சலி



எமது மன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனை வைத்திய உத்தியோகத்தருமாகிய வைத்தியகலாநிதி **திருமதி ராஜினி ஸ்ரீகஜன்** அவர்களின் பாசமிகு தந்தை

**கிருஷ்ணபிள்ளை முத்துக்குமார்**

அவர்கள் 18.10.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.அவரது பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுர்வேத மருத்துவர், நலன்புரி மன்றம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 . 09 . 1953



மறைவு 23 . 09 . 2019

**அமரர் சின்னப்பு பேரின்பநாதன் (நாதன்)**

கடந்த (23.09.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னப்பு பேரின்பநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (23.10.2019) புதன்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் ந.ப. 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பரமேஸ்வரி அம்பாள் வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11 . 08 . 1990

மறைவு 22 . 09 . 2019

அமரர்
**தங்கராஜா அன்ரனி சனால்ட்**

நாட்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குது எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இல.18. மடம் வீதி.
யாழ்ப்பாணம். (CS/28842) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1978



மறைவு 18 . 10 . 2019

CS28861(16/17)

**தங்கவேல் ஜெகன்**

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் ஜெகன் கடந்த **(18.10.2019)** காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(22.10.2019)** செவ்வாய்க் கிழமை மு.ப **10.00**மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- மாமாமார், சித்திமார்

கங்காருவில் நான்கு வகைகள் உண்டு. ரெட் கங்காரு, ஈஸ்டர் க்ரே கங்காரு, வெஸ்டர்ன் க்ரே கங்காரு மற்றும் ஆண்டிலோப் கங்காரு.

கங்காரு இரண்டு கால்களைக் காற்றில் உயர்த்திக் குதிக்கும்போது வேகமாக ஓடும். நான்கு கால்களையும் தரையில் வைத்து நடக்கும்போது மெதுவாகவே நடக்கும்.

கங்காருவின் கால்கள் மிக சக்தி வாய்ந்தவை. அந்த கால்களால் தாக்கவும் முடியும்.

கங்காரு தனது உயரத்தை விட மூன்று மடங்கு உயரம் தாவிக் குதிக்கும் வல்லமை படைத்தது. கங்காருவுக்கு நீந்தும் திறனும் உண்டு.

கங்காரு புல்லை விரும்பி உண்ணும்.

குட்டிக் கங்காருகள் 'ஜோய்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன.

ரெட் கங்காரு வகைதான் வயிற்றில் பையுடைய உயிரினங்களில் பெரியது.

காட்டில் வாழக்கூடிய கங்காரு அதிகபட்சம் ஆறு ஆண்டுகள் வாழும்.

ஆஸ்திரேலியாவின் தேசிய வானூர்தி சேவையான கன்டாஸ், கங்காருவைத் தன் சின்னமாக வைத்துள்ளது.

கங்காரு, தாவரங்களில் ஈரத்தன்மை அதிகம் உள்ள தாவரங்களைச் சாப்பிடும். அப்போதுதான் நீண்டநேரம் அதனால் நீர் இல்லாமல் இருக்கமுடியும்.

ஆடு, மாடுகளைப் போல கங்காருவும் உணவை அசைபோடும் பண்பு கொண்டது. முதலில் வேகவேகமாக உணவை விழுங்கிவிடும். பின்னர் மீண்டும் அந்த உணவை ஆசுவாசமாக வயிற்றிலிருந்து வரவழைத்து மெதுவாக மென்று விழுங்கும்.

கங்காருவின் பற்கள் விசேடமானவை. பழுதுபட்ட கடைவாய்ப் பற்கள் முழுமையாக உதிர்ந்து, மீண்டும் மீண்டும் வளரும் தகவமைப்பைப் பெற்றுள்ளன.

கங்காருவின் வால் தசை வலு கொண்டது, நீளமானது. கங்காரு வேகமாக ஓடிக்கொண்டே திரும்பும்போது விழாமல் சமன்படுத்தும் வேலையை இந்த வால் தான் செய்கிறது.

கங்காருகள் கூட்டமாக வாழக்கூடியவை. ஒரு கூட்டத்தில் 10 முதல் 100 கங்காருகள் வரை இருக்கும். ஆண் விலங்கு களுக்குள் ஆதிக்கத்தை நிலைநாட்ட சண்டையும் நடக்கும்.

ஏதாவது அபாயச் சூழலை உணர்ந்தால், ஒரு கங்காரு தனது கால்களை பூமியில் வேகமாக அறைந்து மற்ற விலங்குகளை எச்சரிக்கும்.



**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் 772. ஆஸ்பத்திரி வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு.
(ஸ்ரேசன் சந்திக்கு அருகில்)
**078 512 7701**

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்.நகரப்பகுதியிலிருந்து
சுன்னாகம் ( K.K.S வீதி)
கோண்டாவில்
(பலாலி வீதி) வீதியில் 6பேர்
கொண்ட குடும்பத்துக்கு
வீடு வாடகைக்குத் தேவை.
**075 32 95 465**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதை கொடுத்த பரிசு

ஒரு கிராமத்தில் இரண்டு மீனவர்கள் நண்பர்களாக இருந்தனர். ஒரு நண்பரின் பெயர் ஜெகதீஸ். மற்றவன் பெயர் பிரகாஷ். இருவரும் தினமும் காலை நேரத்தில் கட்டு மரத்தில் ஏறி, மீன் பிடிக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒருநாள் காலை நேரத்தில் இருவரும் வழக்கம் போல் மீன் பிடிக்கச் சென்றனர்.

அன்றைய தினம் மாலை நேரம் ஆகியும் கூட இருவர் வலையிலும் போதுமான மீன்கள் சிக்கவில்லை. மிகக் குறைந்த அளவிலேயே மீன்கள் மாட்டின. கரையை அடைந்த இருவரும் தங்களுக்குக் கிடைத்த மீனைப் பங்கிட்டுப் பார்த்தனர்.

"நண்பனே, இந்த மீன்களை விற்று அதில் கிடைக்கும் பணத்தில் எம் இருவர் குடும் பத்துக்கு போதிய உணவுப் பொருள்களை வாங்கிச் சமைப்பது கடினம். அதனால், மீன் விற்றுக் கிடைக்கும் பணத்தை நம்மில் ஒருவரே எடுத்துக் கொள்ளலாம்" என்றான் பிரகாஷ்.

"அப்படியானால் நீயே எடுத்துக்கொள். நீதான் மனைவி, மக்களோடு இருக்கிறாய். உன் குடும்பத்தை வறுமையில் வாடவிடாதே... நீயே எடுத்துக்கொள்" என்றான் ஜெகதீஸ்.

"இல்லை நண்பனே. உன் குடும்பத்தில் இரண்டு நபர்கள் அதிகமாக இருக்கின்றனர். அதனால் நீதான் எடுத்துக் கொள்ள வேண்டும்," என்றான் பிரகாஷ்.

"இல்லை நண்பனே, இல்லை கண்டிப்பாக நீதான் எடுத்துக் கொள்ள வேண்டும். உன் குடும்பத்தை வறுமை யில் தவிக்க நான் என்றுமே விடமாட்டேன்" என்று அழுத்தமாகக் கூறினான் ஜெகதீஸ்.

பிரகாஷும், ஜெகதீஸும் ஒருவரையொருவர் இவ்வாறு விட்டுக் கொடுக்காமல், தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் திடீரென ஒரு சத்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர்.

அங்கே கடற்கரையில் ஓர் அழகிய பெண் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் இருவரும் திகைப்புடன் வாயடைத்துப் போயினர். அந்தப் பெண் தேவதை போன்று காட்சி தந்தாள். அந்தப் பெண்ணின் முகத்தை இருவரும் உற்றுப் பார்த்தனர்.

"மீனவர்களே, என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! நான்தான் இந்தக் கடலில் வசிக்கிற கடல் தேவதை. நீங்கள் இரு வரும் ஏதோ வழக்கு நடத்திக் கொண்டிருப்பது போன்று தெரிகிறது. அது என்ன வென்று அறிந்துகொள்ள வேண்டியே உங்கள் அருகில் வந்தேன்" என்றாள் கடல் தேவதை.

"தேவதையே! உன்னைச் சந்தித்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் இருவரும் பிடிக்கிற மீன்களைப் பங்கு போட்டுக் கொள்வோம். இப்போது எங்களுக்குக் குறைந்த அளவே மீன்கள் கிடைத்துள்ளன. என் குடும்பம் வறுமையில் வாடும், அதனால் மீன்களை எடுத்துக்கொள் என்கிறான்" என் நண்பன்.

"என் குடும்பத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், அவன் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காகத்தான் எல்லா மீன்களையும் விற்று கிடைக்கிற பணத்தை என் நண்பன் எடுத்துக்கொள்ளட்டும் என்று சொல் கிறேன். என் நண்பனோ, அதனை மறுத்து என்னை எடுத்துக்கொள்ளும்படியாகச் சொல்கிறான். நீயே அவனுக்கு எடுத்துக் கூறி அவன் குடும்பத்தை வறுமையில் இருந்து காப்பாற்று!" என்றான் பிரகாஷ்.

கடல் தேவதையோ சிரித்தபடியே இருவரையும் நோக்கியது.

"நீங்கள் இருவரும் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் உங்கள் குடும்ப நலன் கருதியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் குடும்பத்தின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் அன்பும், உங்கள் நல்லெண்ணமும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அதனால் உங்கள் இருவருக்கும் உதவி புரியவே வந்துள்ளேன்" என்றது கடல் தேவதை.

பிறகு, பிரகாஷ் முன்பும், ஜெகதீஸ் முன்பும் இரண்டு மூட்டைகள் தோன்றின. கடல் தேவதையும் அங்கிருந்து மறைந்தாள்.

இருவரும் அந்த மூட்டைகளைப் பிரித்துப் பார்த்தனர். அந்த மூட்டைகளில் நிறையப் பொற்காசுகள் காணப்பட்டன.

இருவருமேஅதனைத் தங்கள் ஒற்றுமைக்குக் கிடைத்த பரிசாகவே நினைத்துக் கொண்டனர். அதைக் கொண்டு பெரிய பணக்காரர்கள் ஆயினர்.


## கேள்வி அறிவித்தல்
### சாவகச்சேரி பிரதேச சபை
### சபைநிதி வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016 (i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியானகேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி: 021-2050348, 021-2050356, தொலைநகல்: 021-2050348, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 05.11.2019 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர் /செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரியில் 22.10.2019 ம் திகதியிலிருந்து 05.11.2019 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர் /செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 05.11.2019 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது நாட்கள) (23.12.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/ CF/2019/47,48 | 1. குடமியன் மயானத்துக்கான எல்லைச்சுவர்அமைத்தல். 2. வரணிபொதுநூலகத்தில் வாசிப்புப்பகுதி அமைத்தல். | 0.292 | 1 மாதம் | C9 & C8 | 2,920.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/46 | 1. வளிச்சீராக்கி பொருத்துதல். (சாவகச்சேரி பிரதேச சபை) (Air Conditioner) | 0.640 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட தரம். | 6,400.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/50 | 1. யன்னல் நிலைச்சீலை அமைத்தல். (Vertical Curtain) | 0.215 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட தரம். | 2,150.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/53,54 | 1. A9 வீதியுடன் இணையும் தட்டான்குள வீதிபுனரமைத்தல். 2. ஆலடிப்புலம் கந்தசாமி கோயில் வீதி புனரமைத்தல். (மீசாலை வடக்கு) | 0.521 | 1 மாதம் | C9 & C8 | 5,210.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/49,51,52 | 1) பாலாவி வைரவர் கோயில் பொதுக்கிணறு புனரமைத்தல். 2) கச்சாய் நூலகத்தில் கிணற்று மூடி, இரட்டை ஊஞ்சல் என்பன அமைத்தல். 3) கச்சாய் சந்தை புனரமைத்தல். | 0.563 | 1 மாதம் | C9 & C8 | 5,630.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/60. | i) வீதி மின்விளக்கு கொள்வனவு. | 1.000 (மின்சாரசபை பொருத்தல் கூலி உட்பட) | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட தரம். | 10,100.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/56,59 | 1) கேரதீவு வீதியில் இருந்து புகையிரதவீதி வரை வீதி புனரமைத்தல். 2) நாவற்குழி சந்தையில் பொது மலசல கூடம் அமைத்தல். | 0.303 | 1 மாதம் | C9 & C8 | 3,100.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/43,44,41, 42 | 1) கரம்பைக்குறிச்சி பெருந்தெருவீதி புனரமைத்தல். 2) இரத்தினகடவை வீதி புனரமைத்தல். 3) வீரபத்திரர் வீதி புனரமைத்தல் இயற்றாலை வரணி. 4) குசவந்த வீதி புனரமைத்தல் மந்துவில் கிழக்கு. | 0.515 | 1 மாதம் | C9 & C8 | 5,150.00 | 20.01.2020 |
| NP/14/41(6)/2/ CF/2019/55,61 | 1)சரசாலை உபஅலுவலகம் மற்றும் மலசலகூடத்திருத்தம். 2) எல்லைச்சுவர் அமைத்தல் ஊரிப்பிட்டி மயானம் மட்டுவில். | 0.601 | 1 மாதம் | C9 & C8 | 6,100.00 | 20.01.2020 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 28.10.2019ம் திகதி மாலை 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை**
**கொடிகாமம்**
**22.10.2019**


## மரண அறிவித்தல்

### திருமதி சந்திராதேவி புண்ணியானந்தம்



நெட்டிலிப்பாய் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திராதேவி புண்ணியானந்தம் நேற்று (21.10.2019) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 83, ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அமைந்துள்ள மகன் (புவிதரன்) இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 157 9654**

**தகவல்: பிள்ளைகள்**
**(புவிதரன், பரணிதரன், கங்காதரன்)**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராசமணி (இராசக்கா)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசமணி 18.10.2019 வெள்ளிக்கிழமை அமரத்துவமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற மோகனாம்பிகை மற்றும் இரகுநாதன், வேதவாணி, இரஞ்சினிதேவி, காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் பாலசுப்பிரமணியம், சுவர்ணராணி, காலஞ்சென்றவர்களான தங்கராசா, மகாலிங்கம், மற்றும் ரஜித்தா, வக்சலா ஆகியோரின் அன்பு மாமியும், கனகம்மா, கனகேஸ்வரி, V.K.சண்முகலிங்கம், இராஜஇராஜேஸ்வரி, சற்குணவதி, V.K.அரசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சுப்பிரமணியம், லலிதா மற்றும் நல்லையா, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சசிவதனி, காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம்-அன்னலட்சுமி, நாகராசா மற்றும் கணேசபிள்ளை, காலஞ்சென்ற சிங்கராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2019) புதன்கிழமை முற்பகல் 10 .00 மணியவில் இல.109, திருமகள் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்த தனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**109, திருமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(cs. 28853) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன தேவதை @nazrintwitz

எப்போதும் செலவு போக
மீதியைச் சேமிக்காதே....
சேமிப்புப் போக மீதியை
செலவு செய்....

உள்ளூராட்டக்காரன்

வெட்டுப்பட்டதென்னவோ
நான்...
இறுதியில், அலங்காரம்
முகத்துக்கு....

பழைய சோறு @Aakash

எல்லாத்தெருவிலும்
மதுக்கடை இருக்கிறது,
பல குழந்தைகளுக்கு
அப்பா தான் இல்லை..!

நட்சத்திரா@star_nakshatra

மனம் நிறைந்து சிரிக்கும்
சிரிப்புக்கு அழகு
கொஞ்சம் அதிகம்தான்

ட இன்னும் வரலை

நாம் நினைத்த நேரத்தில்
எம் தேவைகள் எல்லாம்
பூர்த்தி ஆகி விட்டால்
இவ்வாழ்வின் மீது
எமக்கே சுவாரசியமற்று
போகும்.!









# ரஜினியின் அடுத்த படத்தில் கீர்த்தி சுரேஷ்

'தர்பார்' படத்தை அடுத்து ரஜினிகாந்தின் 168ஆவது படத்தை சிவா இயக்குகிறார். 'விஸ்வாசம்' படத்தை அடுத்து நடிகர் சூர்யாவை வைத்துப் படம் இயக்க இருந்த சிவா, தற்போது ரஜினியின் 168ஆவது படத்தை இயக்க உள்ளார். இந்தப் படத்துக்கு டி. இமான் இசையமைக்க உள்ளதாகக் கூறப்படும் நிலையில் படத்தில் ஜோதிகா மற்றும் கீர்த்தி சுரேஷ் இணைந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் நடிகை ஜோதிகா ஏற்கெனவே சந்திரமுகி படத்தில் ரஜினிகாந்துடன் நடித்திருந்தார். அதேவேளை நடிகை கீர்த்தி சுரேஷுக்கு ரஜினிகாந்துடன் நடிக்கும் முதல் படம். இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஜினிகாந்த் நடிப்பில் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் உருவாகி வரும் 'தர்பார்' திரைப்படம் அடுத்த ஆண்டு பொங்கலுக்குத் திரைக்கு வர உள்ளது.







## பிளேட்டோவின் பொன்மொழிகள்

- நல்ல பண்புகளைப் பெறுவதிலும் பிறருக்குப் புகட்டுவதிலும் ஆர்வம் காட்டுவோர் எண்ணிக்கை பெருக வேண்டும்.
- உள்ளடக்கத்துடன் வாழ்வதே மிகப்பெரிய செல்வம்.
- நல்லவர்களுக்குச் சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள்.
- மனிதர்களிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ, முரடனாகவோ ஆகிவிடுவான்.
- சோர்வும், கவலையும்தான் வெற்றிக்குத் தடைபோடும் கற்கள்.
- மனிதனின் அறிவு உறங்கிவிட்டால் அவனது மனதில் கீழான ஆசைகள் தோன்றி வாழ்க்கையைச் சீர்குலைத்து விடும். அனைத்துத் தீமைகளும் போதிய நல்லறிவு இல்லாததால்தான் ஏற்படுகின்றன.
- அளவுக்கு மீறிய செல்வமோ, அளவுக்கு மீறிய வறுமையோ மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் செய்து விடுகிறது.
- அநீதி இழைப்பவன் அநீதிக்கு ஆளானவர்களை விட அதிகமாகத் துயரமடைவான்.
- சிறந்த முறையில் முயற்சி செய்தால் அறிவைப் பெறமுடியும்.
- எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கிறது.
- அநீதியானது மனிதர்களிடையே சச்சரவுகளை விளைவிக்கிறது. நீதியோ, தோழமையை வளர்க்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நோபல் மகத்துவம் என்ன?



இந்த அழைப்புக்கள் வருங்காலத்தில் காணாமல்போகலாம்: "உங்களுக்கு குருதி குறைவாக இருப்பதால், சில போத்தல்கள் குருதி ஏற்ற வேண்டும். குருதி வழங்கும் கொடையாளர்களை அழைத்துவாருங்கள்." 'உங்களுக்கு மாரடைப்பு வந்திருக்கிறது. இரண்டு குருதிக் குழாய்களில் அடைப்பு இருக்கிறது. இரண்டு ஸ்டென்ட்கள் பொருத்தப்பட வேண்டும். அதற்கு நீங்கள் தயாரா?' - இந்த ஆலோசனைகள் இனிக் குறைந்துவிடும். 'உங்கள் புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சையும் கதிர்வீச்சு சிகிச்சையும் தேவைப்படும். அவற்றுக்கெல்லாம் உடல் ஒத்துழைத்தால் மட்டுமே நோய் குணமாகும்.' - இப்படியான அச்சுறுத்தல்கள் இனி இருக்காது. எப்படி? இந்த ஆண்டில் மருத்துவத்தில் நோபல் பரிசு பெற்றுள்ள புதிய கண்டுபிடிப்புகள் வழியாக இவை சாத்தியப்படலாம்.

உடல் செல்களின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டுக்கும் ஆதார ஊற்று ஒக்சிஜன். இதன் அளவு குறைந்தாலும் கூடினாலும் ஆபத்து. அதேநேரம், நம் எல்லோருக்கும் ஒரே அளவில் ஒக்சிஜன் இருப்பதில்லை என்பதும் உண்மை. ஒக்சிசன் குறைவாக இருந்தாலும் எம்மால் உயிர்வாழ முடிகிறது. எப்படி? உடலில் ஒக்சிஜன் குறையும்போது, எம் கழுத்தில் உள்ள 'கரோட்டிட் பாடி' என்னும் அமைப்பு அதை அறிந்து, மூளையைத் தூண்டி நம்மை வேகமாகச் சுவாசிக்க வைக்கிறது. இதனால், எமக்குத் தேவையான ஒக்சிஜன் கிடைத்துவிடுகிறது. இது முன்பே தெரிந்த விடயம். இந்தக் கண்டுபிடிப்புக்கு 1938ஆம் ஆண்டில் நோபல் பரிசு கிடைத்தது.

**ஒக்சிஜன் விநியோகிப்பு**

அடுத்து, நாம் காஷ்மீர், குலுமணாலி போன்ற உயரமான மலைப் பிரதேசங்களுக்குச் செல்கிறோம். அங்குள்ள காற்றுமண்டலத்தில் ஒக்சிஜன் எப்போதும் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், அங்கேயும் எம்மால் தங்கவும் தொடர்ந்து வசிக்கவும் முடிகிறது. எப்படித் தெரியுமா? சிவப்புக் குருதி அணுக்கள் நம் செல்களுக்கு ஒக்சிசனை விநியோகிக்கும் வியாபாரிகள். குருதிக் குழாய் வழியாக உடலில் பயணித்து, தேவைப்படும் இடங்களுக்கு ஒக்சிசனை விநியோகிப்பது இவற்றின் பணி.

உயரமான இடங்களில் இருக்கும்போது நம் சிறுநீரகங்களில் எரித்ரோபாய்ட்டின் எனும் ஹார்மோன் வழக்கத்துக்கு மாறாகக் கூடுதலாகச் சுரக்கிறது. அது சிவப்பு அணுக்களின் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது. உடலில் புதிய குருதிக் குழாய்களும் பிறக்கின்றன. இதன் பயனாக செல்களுக்குத் தேவைப்படும் ஒக்சிசன் கிடைத்துவிடுகிறது. இதுவும் சென்ற நூற்றாண்டின் கண்டுபிடிப்புதான்.

இதுவரை தெரியாமல் கண்ணாமூச்சி காட்டிய விடயங்கள் இரண்டு. ஒக்சிசன் பற்றாக்குறையைச் சிறுநீரகச் செல்கள் எப்படி 'உளவு பார்த்து' உணர்ந்துகொள்கின்றன? இருக்கிற ஒக்சிசனை மற்ற செல்கள் எவ்வாறு பகிர்ந்துகொண்டு தங்களுக்குள் தகவமைத்துக்கொள்கின்றன? இந்த நுணுக்கமான அறிவியல் ரகசியங்களை இப்போது உடைத்திருக்கிறார்கள் கிரெக் செமன்சா, சர் பீட்டர் ரேட்க்ளிப், ஜி.கெலின் என்னும் மூன்று ஆராய்ச்சியாளர்கள். இதற்குத்தான் இவர்களுக்கு இந்த ஆண்டின் நோபல் பரிசு கிடைத்திருக்கிறது.

**அற்புதம் செய்யும் மரபணுக்கள்**

ஹார்வர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் செமன்சாவும் லண்டனைச் சேர்ந்த ரேட்க்ளிப்பும் தனித்தனியாக மேற்கொண்ட ஆராய்ச்சியில், ஒக்சிசன் பற்றாக்குறையை உளவுபார்த்து உணரும் திறன் எரித்ரோபாய்ட்டின் ஹார்மோனை உற்பத்திசெய்யும் சிறுநீரகச் செல்களுக்கு மட்டுமே உரித்தானது அல்ல. உடலில் பல்கிப் பெருகும் எல்லா செல்களுக்கும் இந்தத் திறன் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தனர். இந்த ஆராய்ச்சியில் முக்கியமான திருப்புமுனை இதுதான்.

அடுத்த திருப்பம், பேராசிரியர் செமன்சா கண்டுபிடித்தது. செல்களின் ஒக்சிசன் தகவமைப்புக்கு எரித்ரோபாய்ட்டின் மரபணுவுக்கு அருகிலுள்ள மற்ற மரபணுக்களும் காரணம் என்பது. ஒக்சிசன் பற்றாக்குறையை உணரும் அற்புதத் திறனுள்ள ஒரு ஜோடி மரபணுக்களை இவர் கல்லீரல் செல்களில் கண்டுபிடித்து இதை உறுதிசெய்தார்.

'இந்த மரபணுக்கள் எச்ஐஎப்1 ஆல்பா, ஏஆர்என்டி எனும் இரண்டு வகையான புரதங்களை உற்பத்திசெய்கின்றன. உடலில் ஒக்சிசன் குறையும்போது எச்.ஐ.எப்1 ஆல்பா புரதம் இரட்டிப்பாகிறது. இந்தப் புரதங்கள் எரித்ரோபாய்ட்டின் உற்பத்திக்குக் காரணமான இன்னும் பல மரபணுக்களைத் தூண்டுகின்றன. இதன் பயனாக எரித்ரோபாய்ட்டின் அளவு குருதியில் எகிறுகிறது. சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை பல மடங்கு கூடுகிறது. இப்படித்தான் எமக்குத் தேவையான ஒக்சிஜன் கிடைத்துவிடுகிறது" என்கிறார் கிரெக் செமன்சா.

அடுத்ததாக, ஜான்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கெலின், புற்றுநோய் செல்களை ஆராய்ச்சி செய்யும்போது ஒக்சிசனைத் தகவமைத்துக்கொள்ளும் திறனுக்கும் மரபணுக்களுக்கும் உள்ள தொடர்பை மறுபடியும் உறுதி செய்தார். 'விஹெச்எல்' எனும் மரபணுவின் புரத மூலக்கூறு, புற்றுநோய் வராமல் தடுக்கிறது.

அதேநேரம், 'விஹெச்எல்நோய் எனும் ஒருவகை பரம்பரைப் புற்றுநோய் உள்ளவர்களுக்கு விஹெச்எல் மரபணு இல்லாமல் இருக்கிறது அல்லது அதில் பிறழ்வு இருக்கிறது. இந்தப் புற்றுநோய் பாதித்த உறுப்புக்களில் ஒக்சிஜன் அளவு குறைவாக இருப்பதால், அதை ஈடுகட்ட எரித்ரோபாய்ட்டின் அளவு குருதியில் அதிகமாகிறது. அதன் தூண்டுதலால் புதிய குருதிக் குழாய்கள் அதிக அளவில் அங்கே புறப்படுகின்றன. அதேநேரம், விஹெச்எல் மரபணு உள்ளவர்களுக்கு இந்த மாற்றங்கள் இல்லை' என்கிறார் இவர்.

இப்படி, ஒக்சிசன் பற்றாக்குறையின்போது செல்கள் தங்களைத் தகவமைத்துக்கொள்வதற்கு 'கரோட்டிட் பாடி'யும் எரித்ரோபாய்ட்டின் மட்டுமே காரணமல்ல, மற்ற மரபணுக்களும் அவை உற்பத்திசெய்யும் எச்ஜஎப்1 ஆல்பா, ஏஆர்என்டி புரதங்களும் காரணம் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

**இதனால் என்ன நன்மை?**

உலகில் 100 கோடியே 62 லட்சம் பேருக்கு குருதிச் சோகை நோய் உள்ளது. இவர்களில் வருடந்தோறும் 2 லட்சம் பேர் குருதி செலுத்த வழியில்லாமல் இறந்துபோகிறார்கள். குருதிச் சோகையின்போது உடல் உறுப்புகளுக்குப் போதிய ஒக்சிஜன் கிடைப்பதில்லை என்பதுதான் அடிப்படை பாதிப்பு. இவர்களுக்கு இனி ஒக்சிஜன் தேவையை நிவர்த்திசெய்ய எச்ஜஎப்1 ஆல்பா, ஏஆர்என்டி புரதங்களை ஊக்குவிக்கும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படலாம். அப்போது இவர்களுக்கு குருதி செலுத்தப்படுவது தவிர்க்கப்படலாம்.

அடுத்து, மாரடைப்பு வலி என்பதே இதயத் தசைகளுக்குத் தேவையான ஒக்சிஜன் கிடைக்கவில்லை என்பதை அறிவிக்கும் அலாரம்தான். கரோனரி குருதிக் குழாய்களின் பாதிப்பு இதற்குக் காரணமாகிறது. அவற்றைச் சரிப்படுத்த கரோனரி குழாய்களில் ஸ்டென்ட் பொருத்துகிறார்கள். இதற்கு மாற்றாக, இனி புதிய மருந்துகள் மூலம் எச்ஜஎப்1 ஆல்பா புரதங்களை அதிகமாக உற்பத்திசெய்து, இதயத் தசைகளுக்குத் தேவையான ஆக்ஸிஜன் கிடைக்க வழிவகுக்கலாம்.

அப்போது ஸ்டென்ட் பொருத்தும் வேலை மிச்சமாகலாம். பக்கவாதம் வருவதற்கும் மூளை செல்களில் ஆக்ஸிஜன் குறைவதுதான் அடிப்படை. இதற்கும் புதிய வழிகள் பிறக்கலாம். புற்றுநோய்க்கு இப்போது மருந்து, கதிர்வீச்சு, அறுவை சிகிச்சைகள் இருப்பதுபோல் இனி மரபணு மாற்று சிகிச்சைகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்படலாம். ஆக மொத்தத்தில், மனித குல ஆரோக்கியத்துக்கு நன்னீர் பாய்ச்சும் மகத்தான கண்டுபிடிப்புகள் இவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசியல்வாதிகளின் ஆயுதம் இனவாதம்

அரச தலைவர் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் தெற்கில் மீண்டும் இனவாதம் கையில் எடுக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் கோரிக்கைகள் திரிபுபடுத்தப்பட்டு இனவாதக் கருத்துக்கள் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றன. தெற்கு அரசியல்வாதிகள் தமது ஆயுதமாக இனவாதத்தைக் கையில் எடுப்பது ஒன்றும் புதியது அல்லவே.

இனவாதத்தைப் பேசி மக்களின் வாக்குகளைக் கவரும் உத்திகளை இன்னமும் இலங்கை அரசியல்வாதிகள் கைவிட்டு விடவில்லை. சிறுபான்மை மக்களின் நியாயமான கோரிக்கைகளை அவர்கள் இனவாத நோக்கோடு திரிவுபடுத்திபெரும்பான்மையினமக்களைக்கிளர்ச்சியுறச் செய்து வாக்கு அறுவடை செய்யும் முயற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கட்சிகள் இணைந்து ஒப்பமிட்டுள்ள கோரிக்கை ஆவணம் தொடர்பாக தெற்கில் பெரும் இனவாதப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள் அடங்கிய அந்த ஆவணம், தனிநாடு கோரும் கோரிக்கையாகத் தெற்கில் திரிவுபடுத்தப்படுகின்றது.

அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் முன்வைத்த கோரிக்கைகளைக் காட்டிலும், பாரதூரமான கோரிக்கைகளைத் தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ளன என்று கூறியுள்ளார் மகிந்த ராஜபக்ச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன.

இப்படியான இனவாதச் செயற்பாடுகளால்தான் நாட்டில் போர் ஆரம்பித்தது என்பதை தெற்கு அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். குறுகிய நோக்கத்துக்காக அரசியல் ஆதாயத்துக்காக மக்கள் மத்தியில் இனவாதத்தை வளர்ப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு உகந்ததல்ல என்பதையும் உணர்வது அவசியம்.

நாட்டின் முன்னேற்றம், நாட்டின் பாதுகாப்பு என்று மேடைகளில் முழங்கும் அரசியல்வாதிகள் உண்மையிலேயே அவ்வாறான அக்கறை இருந்தால் இனவாதத்தைக் கையிலெடுக்க மாட்டார்கள் என்பது நிதர்சனம். ஆனால் தற்போதுள்ள அரசியல்வாதிகள் சுயநலன் தவிர்த்துப் பொதுநலன் நோக்கிச் சித்திர்ப்பார்களா என்பது கேள்விக்குறியே.

இவ்வாறான மனோநிலையுடன் உள்ள தெற்கு அரசியல் தலைவர்களிடம் இருந்து தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும் முட்டாள்தனமே. இலங்கையின் முன்னேற்றத்துக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு மிக முக்கியமானது. ஆனால் தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே அவர்களது பேச்சுகளும், நடத்தைகளும் வெளிக்காட்டுகின்றன.

மக்கள் இனவாதத்துக்குள் சிக்கிக்கொள்ளாது விழிப்புடன் செயற்படுவதன் மூலமே நாட்டில் சிறந்த அரசியல் அடித்தளத்தை உருவாக்க முடியும். இனவாதத்தைக் கையில் எடுத்தால் வெற்றிகொள்ள முடியும் என்ற அரசியல்வாதிகளின் எண்ணப்பாட்டைத் தோல்வியுறச் செய்வதன் மூலமே ஆரோக்கியமான அரசியல் தலைவர்களை நாட்டில் உருவாக்க முடியும்.

சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளைத் திரிவுபடுத்திக் குளிர்காயும் அரசியல் போக்கு மாற வேண்டும். நாட்டின் வரலாறு கற்றுத் தந்த பாடங்களை மறக்கக் கூடாது. கடந்தகால நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறாதிருக்க வேண்டுமானால் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொண்டு பயணிக்க வேண்டும். அவற்றைத் திருத்தி முன்னோக்கி நகர்வதற்குச் சிந்திக்கும் அரசியல் தலைவர்கள் உருவாகும் வரையில் நாட்டின் வளர்ச்சியும், மக்களின் முன்னேற்றமும் கேள்விக்குறியே



# ஒட்டுமொத்தப் பேரழிவு

சிரியாவில் நடந்துவருவதைப் பற்றி 'ஒட்டுமொத்தப் பேரழிவு' என்று கூறியிருக்கிறார் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான முன்னாள் அமெரிக்கப் பிரதிநிதி ப்ரெட் மெக்கர்க். அமெரிக்காவின் குர்திஷ் கூட்டாளிகளை வடகிழக்கு சிரியாவில் கைவிடுவது, துருக்கிப் படைகள் முன்னேறுவதற்கான சமிக்ஞை காட்டுவது போன்றவை குறித்து டொனால்ட் ட்ரம்ப் எடுத்த முடிவு, அவரது நிர்வாகத்தினருக்கே அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்திருக்கும். மோசமான பின்விளைவுகள் அவற்றுக்கே உரிய வேகத்தில் ஏற்பட்டுள்ளன. ஆனால், அவை யாவும் பெரிதும் கணிக்கப்பட்டவையே.

### முதலில் வருவது மனிதப் பேரழிவு

துருக்கியின் தாக்குதலால் சிரியாவிலிருந்து குடிமக்கள் 1.3 லட்சம் பேர் தப்பித்துச் சென்றிருக்கிறார்கள். இரண்டாவதாக, அப்பாவிப் பொதுமக்கள் 9 பேரும், முக்கியமான குர்திஷ் அரசியல்வாதி ஒருவரும் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பொன்று குற்ற ஞ்சாட்டியிருக் கிறது. மூன்றாவதாக அய்ன் இஸ்ஸா முகாமுக்கு அருகே துருக்கிப் படை கள் குண்டு வீசியதில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 750 பேர் அந்த முகாமி லிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



குர்திஷ்காரர்களால் நடத்தப்படும் சிரியன் ஜனநாயகப் படைகள் அமைப்புக்கும் நான்கு தசாப்தங்களாக உள்நாட்டுப் போருக்குக் காரணமாக இருக்கும் பி.கே.கே. கட்சிக்கும் இடையே துருக்கிக்கு வித்தியாசம் காணத் தெரியவில்லை. நடுநிலையாக்கப்பட்ட பிரதேசம் ஒன்றை உருவாக்கி, அங்கே சிரியா அகதிகளை மறுகுடியேற்றம் செய்வதைத் தனது நோக்கமாக துருக்கி குறிப்பிடுகிறது.

ஆனால், முன்பு திட்டமிட்டதை மீறி மேலும் தெற்கிலும் மேற்கிலும் துருக்கி தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மார்க் எஸ்பர் தற்போது கூறுகிறார். 1,000 அமெரிக்கத் துருப்புகள் சிரியாவிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுவார்கள். 'துருக்கி எல்லைப் பகுதியில் தீவிரமாக நடக்கும் சண்டையில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பது மிகவும் புத்திசாலித்தனமானது' என்று தனது ட்விட்டரில் பீற்றிக்கொண்டிருக்கிறார்.

### ட்ரம்பின் முடிவுக்கு காரணம் என்ன?

பதவி விலகக் கோரும் வழக்கும், 2020 தேர்தலும் அமெரிக்க அதிபரின் நீண்ட நாள் ஆசையான சிரியாவிலிருந்து துருப்புகளை விலக்கிக்கொள்வது என்பதற்கு வித்திட்டிருக்கிறது. தப்பித்துச் சென்ற ஐ.எஸ். தொடர்புடைய கைதிகளால் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பற்றிக் கேட்கும்போது, அவர் தனது தோளைச் சற்றே உயர்த்திக்கொண்டு, 'அவர்களெல்லாம் ஐரோப்பாவுக்குத் தப்பிச்செல்லப் போகிறார்கள்' என்றார்.


ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரில் ஆயிரக்கணக்கான சிப்பாய்களை சிரிய ஜனநாயகப் படைகள் அமைப்பு இழந்திருக்கிறது. ஐ.எஸ். கைதிகளைச் சிறைவைக்கும் பொறுப்பும் அதனுடையதே. அவர்கள் மீதான அந்த அமைப்பின் பிடி ஏற்கெனவே பலவீனமானது. முகாம் என்பது ஒருபோதும் நீண்ட காலத் தீர்வாக இருந்தது இல்லை. தப்பித்தவர்களால் ஐரோப்பாவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைத் தடுக்க ஐரோப்பா ஏதும் செய்யவில்லை. ஐ.எஸ்ஸின் மறுஎழுச்சி என்பது அனைவரும் அறிந்த ஒன்றே என்று அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜேம்ஸ் மேட்டீஸ் எச்சரித்திருக்கிறார். ஐ.எஸ் என்ற அச்சுறுத்தல்தான் துருக்கி தனது கொடூரமான தாக்குதலை நிறுத்த வேண்டியதற்கான மற்றுமொரு காரணம். அதேபோன்று, குர்திஷ் தலைவர்கள் ரஷ்யாவுடனும் சிரியாவின் பஷார், அல்அஸ்ஸாதின் அரசுடனும் பேச்சு நடத்த வேண்டும். சில நாள்களுக்கு முன்பு துருக்கி அதிபருக்கு ட்ரம்ப் விடுத்த ஆபத்தான தொலைபேசி அழைப்பின் விளைவுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஒட்டுமொத்தப் பேரழிவு? தற்போதுதான் தொடங்கியிருக்கிறது.

*நன்றி : இந்து தமிழ் திசை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் மனமாற்றம் ஏற்படாது தமிழருக்கு எதுவுமே நடக்காது

■ இந்துமதி



போர்க் குற்றங்கள் தொடர்பாக சாட்சியங்களும், ஆதாரங்களும் இருந்தால் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமை வியப்பை அளிக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்கள் வழங்கப்பட்டு ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. இவை தொடர்பாக நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. அதன் பின்னரே பன்னாட்டு ஒத்துழைப்புடன் போர்க் குற்றங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவற்றையெல்லாம் தலைமை அமைச்சர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க அறிந்திராமல் இருக்க முடியாது. இறுதிப் போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகப் படையினர் மீது பாதிக்கப்பட்டவர்களால் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. படையினரால் கைது செய்யப்பட்டவர்களும், படையினரிடம் சரணடைந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அதிகளவில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக இலங்கை அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

**தமிழர்களின் பிரச்சினையில் இலங்கை மெத்தனப்போக்கு**

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை. வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதுதான் அதன் கொள்ளையாகவே மாறிவிட்டது. இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உருப்படியாக எதுவுமே நடக்காது என்பதுதான் உண்மையாகும்.

மேலும் போர் நிறைவுக்கு வந்தவுடன் அப்போதைய அரச தலைவரான மகிந்த ராஜபக்ச போர் வெற்றி தொடர்பாகச் சிந்தித்தாரே தவிர போரால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக சிறிதளவும் அக்கறை காட்டவில்லை. போர்க் குற்றங்களை அவர் முற்றாகவே நிராகரித்தார். இறுதிப் போரில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனவும் அவர் சாதித்தார். படையினர் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவையென வாதித்தார். ஐ.நாவையும், ஐ.நா தீர்மானங்களையும் அவர் மதிக்கவேயில்லை ஒரு முறை ஐ.நா பொதுச் செயலர் இங்கு வருகை தந்திருந்தார். அவர் அகதிகளாகத் தங்கியிருந்த மக்களையும் சென்று பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகச் சில கோரிக்கைகளையும் விடுத்திருந்தார். அவற்றை மகிந்தவும் ஏற்றுக் கொண்டார் ஆனால் எதையுமே அவர் நிறைவேற்றி வைக்கவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாட்டின் அரச தலைவர் என்ற வகையில் அவரால் தேவையான உதவிகளை வழங்கியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு எதுவுமே இடம்பெறவில்லை. போர் வெற்றிக்கு உரிமை கோருவதற்கு மட்டுமே அவரால் முடிந்துள்ளது.

**போர் வெற்றிக்கான உரிமை கோரல்கள்**

தற்போது போர் வெற்றிக்கு சரத் பொன்சேகா உரிமை கோருகின்றார். இராணுவத் தளபதி என்ற வகையில் தாமே போரை நடத்தி வெற்றி கொண்டதாக அவர் தெரிவிக்கிறார். கோத்தபாய போர் இடம்பெற்றபோது கொழும்பில் உள்ள குப்பைகளை அகற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொன்சேகாவின் இந்தக் கருத்துக் காரணமாகவே மகிந்த தரப்புக்கும் அவருக்கும் முரண்பாடு ஏற்பட்டு அவர் சிறையில் இருக்க வேண்டிய நிலையும் உருவானது. இதன் காரணமாக மகிந்த தரப்பினருடன் பொன்சேகா கடுமையான முரண்பாட்டைக் கொண்டிருக்கிறார். சிலவேளை கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் தமது நிலை என்னவாகும்? என்ற அச்சமும் இவரிடம் நிறையவே காணப்படுகின்றது. ஆனால் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லையென்பதில் மகிந்த தரப்புடன் இவரும் ஒன்றுபட்ட நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்.

போர்க்குற்றங்கள் இடம்பெற்றதை எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் இதுவரையில் ஒத்துக்கொள்ளவில்லை. கட்சி பேதமின்றி அதை மறுப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாகவுள்ளனர். அது மட்டுமல்லாது தமிழர்களின் எந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்வதற்கும் அவர்கள் தயாராக வில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

அண்மையில் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து 13 அம்சக் கோரிக்கைகளை வெளியிட்டிருந்தன. கோத்தபாய தரப்பு அதை உடனடியாகவே நிராகரித்துவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி இது தொடர்பாக நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. பௌத்த மகா சங்கத்தினரும் இந்தக் கோரிக்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளனர். இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாமெனவும் அவர்களால் கூறப்பட்டது. யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் பெயர்ப்பலகையில் தமிழருக்கு முதலிடம் வழங்கப்பட்டது கூட தெற்கில் பிரச்சினை ஆக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தெற்கில் உள்ளவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படுகின்ற வரையில் தமிழர்களுக்கு மதிப்புக் கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது. போர்க் குற்றம் மட்டுமல்ல தமிழர்களுடன் தொடர்புடைய எந்தவொரு விடயமும் இன்றைய நிலையில் ஏற்றுக் கொள்ளப்படுமென எதிர்பார்க்க முடியாது. ■

> இலங்கை அரசைப் பொறுத்தவரையில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை. வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதுதான் அதன் கொள்ளையாகவே மாறிவிட்டது. இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உருப்படியாக எதுவுமே நடக்காது என்பதுதான் உண்மையாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# முதிர்கன்னிகளின் கொடுப்பனவு உயர்த்தப்படவேண்டும்

ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் கீழ் செயற்படும் சமூக சேவைப்பிரிவினரால் வறிய நிலையில் உள்ள மக்களுக்கு பல உதவித்திட்டங்கள் வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதே!

அதேபோல் இந்த ஆண்டு சிறப்புத் தேவையுடையவர்களுக்கு அரசின் பணிப்புரையில் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு ஐயாயிரம் ரூபாவாக உயரத்தப்பட்டது. எழுபது வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கு ஆயிரத்து 900 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் மனதுக்கு வேதனைதரும் விடயம் என்னவெனில் 70 வயதுக்குக் கீழ்பட்ட முதிர்கன்னிகள், விதவைகள், மிகவும் வறுமை நிலையில் உள்ள சிலருக்கு இன்னமும் எந்த வித பணமும் அதிகரிக்கவில்லை. 250, 300, 350, 450 என்ற அடிப்படையிலேயே தற்போதும் வழங்கப்படுகின்றது.

இவர்களுக்கான பண உதவியினைச் சற்று கூடுதலாக வழங்கினால் சிறப்பல்லவா? மனநிறைவோடு உரிய அதிகாரிகள் இப்படிப்பட்ட வறுமை நிலையில் உள்ளவர்களின் வாழ்விலும் சற்று வசந்தம் வீச வைப்பார்களா ?

- ஆர்வலர்

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாமெனில் அதைக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனையில் படுகொலையானவர்களுக்கு அஞ்சலி

*யாழ்ப்பாணம், ஒக். 22*

*இந்திய இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களின் 32 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கதிரியக்கப் பிரிவுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள உருவப் படங்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, ஒளிச்சுடர்கள் ஏற்றப்பட்டன.*





தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. சிறப்புரையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர்மருத்துவர் சத்தியமூர்த்தி நிகழ்த்தினார்.

மருத்துவமனையில் தாக்குதல் நடந்தப்பட்ட போது அங்கு கடமையாற்றிய பணியாளரான ஈழத்தமிழ்மணி தனது அனுபங்களைப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து உரையாற்றியிருந்த மருத்துவர் எஸ். சிவதாஸ், இலங்கையிலே பல தாக்குதல் சம்பங்கள், உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும் குறித்த மருத்துவமனையில் தாக்குதல் சம்பவத்தை வேறு ஒரு கோணத்தில் அணுக வேண்டும், காரணம் கடமையில் இருந்த போது அத்தனை பேரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தார்.

அத்துடன், சம்பவத்தைப் பற்றி எதிர்காலச் சந்ததிகள் குறிப்பாக மருத்துவத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையினரால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையில் இருந்த பணியாளர்கள் 21 பேர் மருத்துவமனையில் வைத்து சுட்டுக்கொல்ல ப்பட்டிருந்தனர்.

சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்களும் என 68 பேரைக் கொன்று குவித்தனர். அமைதிப் படை என்ற பெயரில் யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கிய இந்திய இராணுவம், குறித்த கொலைச் சம்பவத்தை அரங்கேற்றியிருந்தது.

(க-21)

## மண்டூர் முதியவர்கள் வடக்குக்கு சுற்றுப்பயணம்



யாழ்ப்பாணம், ஒக். 22

மட்டக்களப்பு மண்டூர் பகுதியில் இருந்து 60க்கும் மேற்பட்ட முதியவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

மண்டூர் முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள் தலைமையில் முதியவர்கள் வடக்கு மாகாணத்தில் பிரசித்த இடங்களுக்குச் சுற்றுப் பயணம் ஆரம்பித்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர்.

இவர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், சந்நிதி முருகன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், நல்லைக் கந்தன் ஆலயம், கைதடி முதியோர் இல்லம் ஆகிய இடங்களைத் தரிசித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-160)

## ஆண்டு நிறைவு விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும்

யாழ்ப்பாணம், ஒக். 22

இளவாலை வருத்தபாதத வாலிபர் சங்கத்தின் 6 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வாலிபத்தீபாவளிக் கொண்டாட்டமும் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சாதனைபடைத்த மாணவர் மதிப்பளிப்பு, கலாசார நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், மாயாஜால வித்தைகள், இசைச்சங்கமம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (க)

## முல்லையில் ஐஸ்போதை: இருவருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, ஓக். 22

முல்லைத்தீவுப் பகுதியில் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. முல்லைதீவு புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை 50 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்நிலையில் சந்தேகநபர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் த. பரஞ்சோதி முன்னிலையில் கடந்த சனிக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன் முறையாக ஐஸ்போதைப் பொருள் சிக்கிய சம்பவம் இதுவே என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ரி3)

## வாசிப்பு மாதத்தில் முன்பள்ளி சிறார்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

கச்சாய் பொது நூலகத்தால் "வாசிக்கும் சமூகத்தை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" எனும் தொனிப் பொருளுக்கு அமைவாக கச்சாய் அன்னை திரேசா முன்பள்ளியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றன. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கச்சாய் பொது நூலக நூலகர் ஆகியோர் கலந்து கொண்டனர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும், வெற்றிகரமான வாழ்க்கைக்கு வாசிப்போம், அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்க வாசிப்பு அவசியம், சிறந்த வாசிப்பு நாட்டின் பூரண அபிவிருத்திக்கு வழியமைக்கும், சமுதாயத்தின் அடித்தளம் வாசிப்பும் நூலகங்களும் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் முன்பள்ளிச் சிறார்கள் விழிப்புணர்வில் ஈடுபட்டனர். (ஐ-159)



# ஹாட்லிக் கல்லூரியில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 22

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்றன.

கல்லூரி அதிபர் தர்மலிங்கம் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமராட்சி வலய க்கல்விப் பணிப்பாளர் வை. ரவீந்திரனும், வட மாகாண விஞ்ஞான உதவிக் கல்வி பனிப்பாளார் ஆகியோர் இணைந்து சம்பிரதாயமாகக் கண்காட்சி கூடங்களைத் திறந்து வைத்தனர்.



விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழிநுட்பம், எந்திரவியல் தொழிநுட்பம், உயிர் முறைமைகள் தொழிநுட்பம், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம், இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், வணிகக்கல்வி, தமிழ், வரலாறு, புவியில், சுகாதாரமும் உடற்கல்வியும், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், சமயம், கிறிஸ்தவம், செய்முறைத் தொழிநுட்பம் உள்ளிட்ட பாடத்திட்டங்களுக்கு அமைவாகக் காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. தொங்குபாலம், பாய்மரக் கப்பல், கடலில் மூழ்கிய அலெக்ஸாண்ட்ரியா நகரம், துறைமுக நகரம், பேய் வீடு, நீர்வீழ்ச்சி, குளம், டைனோசர், இலங்கையின் தரைத்தோற்ற அமைப்பு, ஐவகை நிலம், புராதன குடிசை, கம்பி வட ஊர்தி, பொம்மலாட்ட அரங்கு என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியை அயல் பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிட்டனர். (க-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வர்த்தக நிலையங்களில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

## மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

வவுனியா,ஒக்.22

வவுனியா நகரப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரப்பகுதியில் டெங்குத் தொற்றின் பாதிப்பு அதிகரித்துள்ளது. அதனைத் தொடர்ந்து வவுனியா பொதுமருத்துவமனையில் 46 டெங்குத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். குறிப்பாக வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களே அதிகளவாக டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்களில் 33 பேருக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் நகர்ப்பகுதிகளில் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டவர்களும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகினர்.

அவர்களில் இரண்டு மாணவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை சுகாதாரப் பரிசோதகர்கள் 9 பேரும், 5 உதவியாளர்களும், 10 குடும்பநல அலுவலர்களும், 6 சுகாதாரப் பணி உதவியாளர்களும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா நகரப்பகுதியில் 170 இடங்களில் நுளம்புகளின் குடம்பிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு அது டெங்கு நுளம்புப் பூச்சி ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நகரப்பகுதியில் கடைகளில் பணியாற்றுபவர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதரப்பரிசோதகர்கள் நுளம்பு உள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவற்றை மாற்றம் செய்துள்ள போதும், டெங்கு நுளம்புகள் அதிகளவாகக் கடைகளுக்குள்ளே இருப்பதை சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தற்போது தீபாவளிப் பண்டிகை நெருங்கி வருகின்றமையால் டெங்குத் தாக்கம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கடைகளுக்குள் டெங்கு நுளம்புகள் அதிகளவாக இருப்பதால் நோயாளிகள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஆகவே நகர்ப்பகுதிக்கு வரும் பொது மக்கள் நீளமான தடித்த இறுக்கமற்ற உடைகளை அணிந்து வருவதன் மூலம், நுளம்பு கடியிலிருந்து தங்களைப் பாதுகாக்க முடிவதுடன், நகர்ப் பகுதிக்கு வரும் பொது மக்கள் குறுகிய காலப்பகுதியில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து நகரை விட்டு வெளியேறி அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் மாலை நேர வகுப்புக்குச் செல்லும் போது நீளமான தடித்த உடைகளை அணிவதன் மூலம் நுளம்புக் கடியிலிருந்து மாணவர்களையும் பாதுகாத்து கொள்ள முடியும். அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் காலைநேர மற்றும் மாலைநேர வகுப்புக்களில் நுளம்புத்திரிகளைப் பாவிக்க வேண்டும்.

பொதுமக்கள் தினமும் தாங்கள் வசிக்கும் சூழலைத் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக குளிர்சாதனப்பெட்டியின் பின் பகுதிகள், தண்ணீர் தொட்டிகள், பூச்சாடி தொட்டிகள், கிணறுகள், கைவிடப்பட்ட மலசல கூடங்கள் நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் டெங்கு நுளம்பு பரவாமல் இருக்க சகலரும் கிணறுகளில் மீன் வளர்க்க வேண்டும் அதற்கான மீன்களை எமது மலேரியா தடை இயக்கம் மக்களுக்கு தேவையான அளவு வழங்குவதற்கு தயாராகவுள்ளது.

இதுவரை டெங்குக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் 27 பேருக்கு நீதி மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவர்களின் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இரண்டு பேருக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஐவர் 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இனி வரும்காலத்தில்நுளம்புபெருக்க சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது ஆறு மாதத்துக்கு குறையாத சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்பிருப்பதால், பொது மக்கள்

தங்கள் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு பிராந்திய சகாதாரத்திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (க-ரி4)

## சிறுவர் தின நிகழ்வு



கொடிகாமம்,ஒக்.22

யாழ்ப்பாணம் கச்சாய் பொது நூலகத்தின் முன்பள்ளி மாணவர்களுக்கான சிறுவர் தின நிகழ்வு நூலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் முதன்மை முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அன்னை திரேசா முன்பள்ளி, ஞான சூரியன் முன்பள்ளி, ஐங்கரன் முன்பள்ளி, கொடிகாமம் மத்தி முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர் வாசகர் வட்டக் குழுவினர் சிறுவர்களுடன் இணைந்து சிறுவர் தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். (ஐ-159)

## ஓய்வூதியர்கள் மதிப்பளிப்பு

கிளிநொச்சி,ஒக்.22

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை மூத்த ஓய்வூதியர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சிக் கூட்டுறவாளர் மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர்கள் சங்கத்தின் தலைவர் அ. கனகரத்தினம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சி.சத்தியசீலன், மேலதிக செயலர் (காணி) ந.திருலிங்க நாதன், கரைச்சி, பூநகரி, பச்சிலைபள்ளி, கண்டாவளை ஆகிய வற்றின் பிரதேச செயலர்கள் கலந்து கொள்ளவுள்ள னர்.

மூத்த ஓய்வூதியர்கள் பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்படவுள்ளனர். நிகழ்வில் சிறப்புரையை ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் நிகழ்த்தவுள்ளார். (ஐ-421)

## தளபாடங்கள் கையளிப்பு


கொடிகாமம்,ஒக். 22

யாழ்ப்பாணம் கொடிகாமம் மத்தி விநாயகர் சனசமூக நிலை யத்துக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலி ருந்து இந்த உதவி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தளபாடங்களை சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்களாக வை.ஜெக தாஸ் மற்றும் அ.நிமலறோகன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (ஐ-159)

## விழிப்புலனற்றோருக்கு வழிகாட்டி பலகை திறப்பு




வவுனியா,ஒக்.22

பன்னாட்டு வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு "விழிப்புலனற்றோருக்கான குற்றெழுத்து வழிகாட்டி பெயர்பலகை" வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டச் செயலர் எம். கனீபா குற்றெ முத்து வழிகாட்டி பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். இதன் மூலம் விழிப்பு லன்றறவர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள திணைக்களங்களுக்கு இலகுவாகப் பயணிக்க கூடிய வசதி ஏற்படுத்தபட்டுள்ளது.

"சிறப்பும்தேவையுடையவர்களிடம்ஏதோ ஒரு திறமை நிச்சயம் மறைந்திருக்கும். இதனை நாம் கண்டு கொண்டால் அவர்கள் எமக்குப் பாரமாக இருப்பார்கள் என்ற சமூகத்தின் எண்ணத்தை அகற்ற முடியும். அந்த விட யத்தைக்கண்டுபிடிப்பது மாத்திரமே எமது நடவடிக்கையாக இருக்க வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டுக்கும், குடும்ப ங்களுக்கும் பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்" என்று நிகழ்வில் உரையாற்றிய மாவாட்டச் செயலர் தெரிவித்தார்.

நிகழ்வில்நகரசபை உறுப்பிணர்ரி.கே.ராஜலிங்கம், சமூக சேவைகள் அலுவலர் எஸ்.ஸ்ரீனிவாசன், உதவி மாவட்டச் செயலர் ந.கமலதாஸ், மதகுருமார், மாற்று வலுவுடையவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மாற்று வலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமையத்தின் ஏற்பாட்டில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. (க-110)

## நாவந்துறையில் சிறுவர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

நாவாந்துறை கலைவாணி சிறுவர் பூங்கா, சிறுவர் பயன்பாட்டுக்காக நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாவின் யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித ஊரெழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பூங்கா சீரமைக்கப்பட்டுள்ளது.

கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவர் பு.அருணாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் சனசமூக நிலையத்தின் உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகத்தினர், மக்கள் கலந்து கொண்டனர் என்று முதல்வரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தியில் வைக்கப்பட்டிருந்த அஞ்சல் பெட்டி அகற்றப்பட்டது

சாவகச்சேரி, ஒக்.22
சாவகச்சேரி அஞ்சலகச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த அஞ்சல் பெட்டி கடந்த ஒரு மாதமாகக் காணப்படாததால், ஏ-9 முதன்மைச் சாலையில் வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் அஞ்சல்களைச் சேர்ப்பிப்பதற்கு 100 மீற்றர் தூரம் வரை வாகனத்தில் செல்ல வேண்டியுள்ளது.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் அஞ்சலகச் சந்தியில் அஞ்சல் பெட்டி இல்லாதிருந்தது. முதன்மைச் சாலையில் வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் அஞ்சல்களைச் சேர்ப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், சந்தியில் அஞ்சல் பெட்டி வைக்குமாறும் பல தடவைகள் அஞ்சல் அலுவலகத்தில் முறையிட்டும் அஞ்சல் பெட்டி வைக்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போதைய அஞ்சல் அதிபர் இன்பராஜ் லம்பேட்டின் முயற்சியால் கடந்த வருடம் சந்தியில் அஞ்சல் பெட்டி வைக்கப்பட்டது. இதனால் ஏ-9 முதன்மைச் சாலையில் வருவோர் அஞ்சல் பெட்டியில் அஞ்சல்களைச் சேர்க்க முடிந்தது.

எனினும் இந்த அஞ்சல் பெட்டி கடந்த ஒரு மாதமாக அப்புறப்படுத்தப்பட்டதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர். இது தொடர்பாக அஞ்சல் அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தனது அனுமதியுடன் நீர்க்குழாய் பொருத்தும் பணியில் ஈடுபடுவோர் அதனை அப்புறப்படுத்தி அலுவலகத்தில் வைத்துள்ளனர்.

அவர்களது பணி முடிந்ததும் உரிய இடத்தில் வைப்பதென உறுதிமொழி வழங்கியுள்ளனர். நிலத்தில் பொருத்தப்பட்டிருந்த குழாயில் அடிக்கடி வெடிப்பு ஏற்பட்டு நீர் வெளியேறுவதால் உடனடியாகப் பொருத்த முடியவில்லை. விரைவில் பொருத்துவார்கள். என்றார். (க-9)




# மன்னாரில் தொடரும் மழையால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

மன்னார், ஒக்.22
மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகக் கடும் மழை பெய்து வருதால், நகரத்தை அண்டிய பல பகுதிகளில் நீர் வழிந்தோட வழி இல்லாமல் தேங்கிக் கிடக்கிறது. இதன்காரணமாக மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மன்னார் நகரத்தை அண்டிய பல பகுதிகளில் உள்ள வீட்டு வளவுகள், வீதிகள், விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா பள்ளங்களில் வெள்ளம் நிறைந்துள்ளது.

நிரம்பியுள்ள வெள்ளம் வழிந்தோடிக் கடலில் கலப்பதற்கு உரிய வடிகால் அமைப்புகள் இல்லாதபடியால், பல நாள்கள் தேங்கிய நிலையில் காணப்படுகிறது.

இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. உயிரிழப்பை ஏற்படுத்தும் மலேரியா டெங்கு போன்ற நோய்கள் பரவும் வாய்ப்பு உள்ளதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பல நாள்களாக தேங்கி நிற்கும் கழிவு நீர்களை அகற்றுவதற்கு மன்னார் நகர சபை, பிரதேச சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக மன்னார் சாந்திபுரம் ஜிம்ரோன் நகர் பகுதி மக்கள் அதிகளவான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-213)

## நடுவர் சபை அமர்வு மாற்றம்

சாவகச்சேரி, ஒக்.22
எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளதால், சாவகச்சேரி நடுவர் சபையின் அமர்வு முதல்நாள் சனிக்கிழமை டிறிபேக் கல்லூரியில் இடம்பெறும் என்று சபையின் தவிசாளர் வை. இராசரத்தினம் அறிவித்துள்ளார். (க-9)

## சீரமைக்கப்பட்ட மைதானம் திறப்பு



யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணம் நாவாந்துறை சென் நீக்லஸ் மைதானம் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் சிபாரிசில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ சேனாதிராசாவின் கிராம எழுச்சித் திட்ட நிதியில் குறித்த மைதானம் சீரமைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பின மாவை சோ சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் நிகழ்வில் சென் நீக்லஸ் சனசமூக நிலையத்தின் உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்கள், அப் பகுதி பொதுமக்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-105)



## கூட்டுறவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாண மாவட்ட பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வு அண்மையில் கொண்டாடப்பட்டது.

இதன்போது சிறந்த சங்கங்கள், கொத்தனிகள் தெரிவு செய்யப்பட்டன.

சிறந்த சங்கங்களில் முதலாம் இடத்தை அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திகூட்டுறவுசங்கமும், இரண்டாம் இடத்தை சாவகச்சேரி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கமும், மூன்றாம் இடத்தை கோண்டாவில் பனைதென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கமும் பெற்றுள்ளன.

சிறந்த. கொத்தணிகளில் முதலாம் இடத்தை வலிகாகாமம்பனைதென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்களின் கொத்தணியும், இரண்டாம் இடத்தை தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் பெற்றுக்கொண்டன. (ஐ-63)

# பாதாள உலகக் குழுவினருக்கு என் ஆட்சியில் முடிவுகட்டுவேன்

## கோத்தபாய சொல்கிறார்

கொழும்பு, ஒக். 22
அரச தலைவராக ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியவுடன், பாதாள உலகக் குழுவினரை முழுமையாக இல்லாது செய்வேன் என்று அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

வெலிகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நான் தற்போது இங்கு வரும்போது, மக்களைச் சந்தித்தேன். இவர்கள் அனைவரும் பாதுகாப்பான நாடொன்றை வழங்குமாறுதான் எம்மிடம் கோரிக்கை விடுக்கிறார்கள். போரை நாம் நிறைவுசெய்த பின்னர், தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாத அமைப்புக்களை கண்காணிக்க சிறப்புக் குழுக்களை நியமித்திருந்தோம். இதற்காக அதிகாரிகளுக்கு சிறப்பு பயிற்சிகளையும் வழங்கியிருந்தோம். எனினும், இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் நாட்டின் தேசியப் பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு தெளிவுபடுத்தலும் இவர்களுக்குக் கிடையாது. இதன் பயனைத்தான் நாம் ஈஸ்டர் தினத்தன்று தெரிந்துக்கொண்டோம். ஆட்சியைக் கைப்பற்றியவுடன் நாம் மீண்டும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவோம். அன்று நாம் பாதாள உலகக் குழுக்கள், போதைப்பொருள் வர்த்தகங்களை இல்லாது செய்திருந்தோம். இந்த செயற்பாட்டையும் நாம் மீண்டும் ஆரம்பிப்போம். எமது நாடு தற்போது அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. எம்மைப் பொறுத்தவரை நாட்டை மீண்டும் பலப்படுத்த வேண்டும் என்பதுதான் எமது பிரதான நோக்கமாகும்' - என்றார். (ம)

# மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவும்

## மன்னார் நகர சபை உறுப்பினர்கள் கோரிக்கை

மன்னார், ஒக்.22
தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தேங்குகின்ற மழைத் தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு மன்னார் நகர சபை உறுப்பினர்களால் சபையில் கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

மன்னார் நகர சபையின் 20ஆவது அமர்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சபைத் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. அமர்வின் போதே நகர சபை உறுப்பினர்கள் குறித்த கோரிக்கையை முன் வைத்தனர்.

"மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் நகர சபைக்குட்பட்ட பல பகுதிகளில் மழைத் தண்ணீர் தேங்கியுள்ளது.

எனவே குறித்த மழைத் தண்ணீரை வெளியேற்றும் வகையில், வடிகாலமைப்புக்கள் சீர் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நகர சபை உறுப்பினர்கள் என்ற வகையில் எங்களிடம் தமது பிரச்சினைகளை முன் வைக்கின்றனர்.

எனவே நாங்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை வீதி சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக நேற்றைய சபை அமர்வில் கலந்துரையாடப்பட்டன. (ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கின்றது டெங்குத் தொற்று

*யாழ்ப்பாணம், ஒக்.22*

*ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 55 ஆயிரத்து 894 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவிததுள்ளது.*

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த மாதத்தில் பதிவான டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த மாதத்தில் 4 ஆயிரத்து 155 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகிள்ளனர்.

அதேவேளை இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள் டெங்குத் தொற்றால் 72 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

தற்போது நாட்டில் காணப்படும் மழையுடனான காலநிலையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அதனால் டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் தமது சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருப்பதன் ஊடாக டெங்குத் தொற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(எ)

## பருவ கால கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஒக்.22

தென்மராட்சிப் பிரதேச இடர் முகாமைத்துவ அலகின் பிரதேச மட்டப் பருவகாலக் கலந்துரையாடல் எதிர்வரும் 25ஆம்திகதி முற்பகல் 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி, சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடக்கவுள்ளது.

இடர் முகாமைத்துவ அலகின் பங்குதாரர்கள் மற்றும் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள முடியும் என்று பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார்.

(எ-9)

## தாக்குதலுக்கு இலக்காகி இருவர் மருத்துவமனையில்

வவுனியா, ஒக்.22

இளைஞர்களின் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.


இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் மது போதையில் இருந்ததாக தெரிவிக்கப்படும் இரு இளைஞர்கள் அவ் வீதியூடாக பயணித்த இருவரை வழிமறித்து அவர்களுடன் முரண்பட்டதுடன் போத்தல் ஒன்றால் அவர்களை தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் 30,24 வயதுடைய இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஜ-110)



## வரணி பொது நூலகத்தின் வாசிப்பு மாத போட்டிகள்

வரணி, ஒக்.22

சாவகச்சேரிப் பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய போட்டிகள் நேற்று நடத்தப்பட்டன. வரணி மத்திய கலாசார மண்டபத்தில் அவை நடைபெற்றன.

தரம் 3 மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டியும், தரம் 6, 7, 8 மாணவர்களுக்கு இரண்டாம் மொழி (சிங்களம்) வாசிப்புப் போட்டியும், தரம் 6,7,8,9,10 மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சுப் போட்டியும் நடத்தப்பட்டன.

(எ-9)

# "இயற்கை அமுது" நாடகம் முதலிடம்

சாவகச்சேரி, ஒக்.22

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் ரேந்த பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையிலான வலய மட்ட நாடகப் போட்டிகள் கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றன.

சாவகச்சேரி மகளிர் கல்லூர் மாணவிகளின் இயற்கை அமுது என்றும் நாடகம் அதில் முதலிடம் பெற்றது.



(எ-9)



## ஈருருளிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 80 பேருக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.


இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் கரும்பனை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வனிகசூரியவின் எண்ணக்கருவுக்கு அமைய 513 படைப்பிரிவின் ஏற்பாட்டில் மீகமுவ சட்டத்தரனீ சங்கத்தின் நிதியுதவியுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் 160 பேருக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

(ஜ)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் போட்டிகள்



புதுக்குடியிருப்பு, ஒக்.22


புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் புதுக்குடியிருப்புப் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நேற்று மாணவர்களிடையே சித்திரம், பேச்சு, கட்டுரை, வாசிப்பு போட்டிகளையும், முன்பள்ளிச் சிறார்களுக்குக் கதை கூறல் போட்டியும் நடத்தினர்.

நூலக எல்லைக்குட்பட்ட மாணவர்களும், முன்பள்ளிச் சிறார்களும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றினர் என்று நூலகர் சி.ஜெயகாந்தன் தெரிவித்தார்.

(எ-9)

## வீதியில் உறங்கும் கட்டாக்காலிகளைப் பிடித்து உரிமையாளர்களிடம் தண்டம் பெற நடடிக்கை

மன்னார், ஒக்.22



கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் நானாட்டன் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

மன்னார் நானாட்டன் பிரதேசத்தில் கட்டாக்காலிகளின் தொல்லை சமீப காலமாகவே அதிகரித்துள்ளது என்று பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள னர். இரவு வேளைகளில் வீதிகளின் நடுவே படுத்துறங்கும் கால்நடைகளால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. மனிதர்கள் மட்டுமல்லாது கால்நடைகளும் உயிர்ச் சேதங்களுக்கு உள்ளாகின்றன. மழை ஆரம்பித்துள்ள நிலையில் கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

நானாட்டானில் இருந்து மன்னார் உயிலங்குளம் மற்றும் முருங்கன் முதன்மை வீதிகளில் இவ்வாறு பெருமளவு கால்நடைகள் இரவு மற்றும் பகல் வேளைகளிலும் குவிந்து நிற்கின்றன. வாகன ஓட்டுநர்கள், மக்கள் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களும் இதனால் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதியைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"கால் நடைகளால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கால்நடைகளை இரவில் பட்டிகளில் அடைத்து வைத்து பராமரிக்குமாறு பண்ணையாளர்களின் கவனத்துக்கு முதலாவது அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டாக்காலியாக திரியும் கால் நடைகளை பிடித்து அவற்றிற்கு தண்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று தவிசாளர் தெரிவித்தார்.

(ஜ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மையங்களில் அச்சுறுத்தல் இருந்தால் வாக்களிப்பு கைவிடப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 22


அஞ்சல் வாக்குச் சீட்டு புள்ளடியிடும் மையங்களில் ஏதாவது தலையீடுகளோ அல்லது அச்சுறுத்தும் முயற்சிகளோ இடம் பெற்றால், அந்த மையங்களில் இடம்பெற்ற வாக்களிப்பு கைவிடப் படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

'அரச பணியாளர்கள் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களில் தமது விருப் பத் தெரிவை குறிப்பிடுவதில், இரக சியத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதைக் கண்டறிய முடியாது.

அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள், எதிர்வரும் 31ஆம் நாளும், நவம்பர் முதலாம் திகதியும் வாக்களிக்க முடியும். காவல்துறை திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், நவம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளில் வாக்களிக்க லாம்.

இந்த நாள்களில் வாக்களிக்க முடி யாதவர்களுக்கு, நவம்பர் 7ஆம் திகதி வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தேர்தல் திணைக்கள அதிகாரிக ளும், நவம்பர் 7ஆம் திகதி வாக்க ளிக்க முடியும்.' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)



# யாழ்.பல்கலை மாணவர்களை சந்தித்த சுவாமிநாதன் எம்.பி

கொடிகாமம்.ஒக். 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும், முன்னாள் அமைச்சரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான டி.எம். சுவாமிநாதனுக்கு மிடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் காலை 9 மணிக்கு இந்தக் கலந்து ரையாடல் இடம் பெற்றது

கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர் உட்பட அனைத்துப் பிரிவுகளினுடைய தலைவர் செயலாளர் களும், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநா தன் மற்றும், தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன் றியத்தின் பிரதி நிதியும் சமூக சேவையாளருமான ச.சாந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள மலசலகூ டப் பிரச்சினை, தங்குமிடவிடுதி, குடிதண்ணீர்ப் பிரச் சினை, சிறப்புத்தேவையுடைய மாணவர்கள் மேல்மா டிகளுக்கு செல்வதில் உள்ள சிக்கல்கள், போன்றன பற்றியும் மாணவர்கள் நடாளுமன்ற உறுப்பினருக்கு எடுத்துக் கூறினர்.

மாணவர்களது கருத்துக்களையும், கோரிக்கைகளை யும் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இனிவரும் காலங்க ளில் தன்னாலான உதவிகளைச் செய்வதற்கு முன் வருவதாக தெரிவித்தார் என்று தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதி நிதி ச.சாந்தகுமார் உதயனுக்குத் தெரிவித்தார். (ஜ -159)

## 1,034 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு

கொழும்பு, ஒக். 22

அரச தலைவர் தேர்தலுடன் தொடர் புடைய ஆயிரத்து 34 முறைப்பாடு கள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் 992 முறைப்பாடுகளும், வன் முறை சம்பவங்கள் தொடர்பில் 8 முறைப்பாடுகளும் மற்றும் 30 வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள் ளன. (ம)

# கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை

## அமைச்சர் கபீர் ஹசிம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

வாக்குகளுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் தயா ரில்லை என ஐக்கிய தேசியக் கட் சியின் தவிசாளரும் அமைச்சரு மான கபீர் ஹசிம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட டார். நாங்கள் ஒரே கொள்கையில் இருக்கிறோம், அவர்களுக்கு இவ்வாறு, இவர்க ளுக்கு இவ்வாறு என்று இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்த லுக்காக முன்வைக்கும் நிபந்தனை களுக்கு நாம் அடிபணிய மாட் டோம் என உறுதியாக தெரிவித்துள் ளோம். நாட்டின் இறை யாண்மை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பில் நாங்கள் உறுதியான தீர்மானத்தி லேயே இருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## நாட்டின் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்

### சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 22

எமது தேசத்தின் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பி னர் சிறிதரன். கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக சட்டவிரோதமாக அழிக்கப்பட்டு வரும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற் றது. இதில் உரையாற்றுகையிலேயே சிறிதரன் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தேசம் விடுதலையை நோக்கி நகர்ந்து கொண்டி ருக்கின்ற சமநேரத்தில் இயற்கை வளங்களையும் பாது காப்பாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் இயற்கை யைப் பாதுகாக்கின்ற திட்டங்களையும் உருவாக்க வேண்டும். எமது அடுத்த சந்ததிக்காக நாம் எதை விட் டுச் செல்லப் போகின்றோம் என்கின்ற கேள்வியும் இந்த நேரத்தில் எனக்கு எழுகின்றது. நாம் எல்லோரும் இயற்கை வளங்களைப் பாதுகாத்து பத்திரமாக எமது அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டும். இதை எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில்கூட தமி ழீழ விடுதலைப் புலிகள் நடைமுறைப்படுத்தி இருந்தார் கள். வனவள பாதுகாப்புப் பிரிவின் மூலம் எமது வனப் பகுதிகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் இன்று நாம் நமது இயற்கை வளங்களைப் பாதுகாக்க முடியாத துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். எனவே சமூகத்தில் இத்தகைய கருத்துக்களை முன்வைப்பதுடன் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-6)

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விக்கிப்பீடியர்களின் மாநாடு

யாழ்ப்பாணம்.ஒக். 22

தமிழ் விக்கிப்பீடியாவின் 16 ஆவது ஆண்டு நிறைவு மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் ஓர் அங்கமாகப் பொதுமக்க ளுக்கு அறிவூட்டும் வகையில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து அறிவியல் தமிழ் கருத் தரங்கை விக்கிப்பீடியா குழுமத்தினர் முன்னெடுத்திருந்தனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துக்கு அருகாமையில் உள்ள சரஸ் வதி மண்டபத்தின் ஹம்சியா மகா லில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது

விக்கிப்பீடியா குழுமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் மு. சிவகோசரன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர் வேஸ்வரா வரவேற்புரையாற்றி னார்.

தொடர்ந்து கு.மிருபா, கு. ஜருணி, கு. யுகர்ணி ஆகியோரது வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வாழ்நாள் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் வாழ்த்துரை வழங்கினார்

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்த மிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரையாற்றினார். 2003 ஆம் ஆண்டில் தமிழ் விக்கிப்பீடியா வைத் தொடக்கிய கட்டடக் கலைஞர் இணுவிலூர் இ.மயூரநாதன் விக் கிப்பீடியா குறித்த அறிமுகவு ரையை ஆற்றினார்.

தமிழ் விக்கிப்பீடியாவைத் தொடக்கி வைத்தமைக்காக இ. மயூரநாதன் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் அ. சண்முகதாசால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அறிவி யல் தமிழ் வளர்ச்சிக்கு ஈழத்தவர்க ளின் பங்களிப்பு என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.செல்வ மனோக ரன் சிறப்புரையாற்றினார். தமிழ்ச் சங்கப் பொருளாளர் தி.வேல்நம்பி நிறைவுரையாற்றினார்.

தமிழ் விக்கிப்பீடியா பயுலுநர்களி டையே நடத்திய போட்டிகளில் வெற் றியீட்டியோருக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. பரிசுகளை யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி வழங்கினார்.

தமிழ் விக்கிப்பீடியாவின் 16 ஆவது ஆண்டு மாநாட்டிற்காக தமிழகம் மற்றும் புலம் பெயர் நாடுகளில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட விக் கிப்பீடியர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸஹ்ரானுடன் என்னை தொடர்புபடுத்தாதீர்கள்

## எதிரணியினரின் வங்குரோத்து அரசியல் இது என்கின்றார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 22

இந்த நாட்டின் பயங்கரவாதத்துக்கு முஸ்லிம் இளைஞர்கள் பலியாகிவிடக் கூடாது என்பதற்காகவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றொரு இயக்கம் உருவாக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் மீதும்அதன் தலைமைத்துவத்தின் மீதும் வீண் பழியை சுமத்துவது என்பது எதிர்த் தரப்பினருடைய வங்குரோத்து அரசியலையும் மிகப் பெரிய ஜனநாயக விரோதச் செயற்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி றோயல் விடுதியில் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னையும் பயங்கரவாதி ஸஹ்ரானையும் தொடர்புப்படுத்தி பழைய ஒரு காணொளியைக் காட்சிப்படுத்தி அவருக்கும் எனக்கும் சம்மந்தம் இருப்பது போன்று ஒரு தோற்றப்பாட்டைக் காட்ட எத்தனித்தனிக்கும் இழிவான செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இதன் பின்னணியென்ன வென்றால், 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 40க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொண்டோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒரு உறுப்பினரைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு வாய்ப்பு கிட்டியது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மூன்று ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.

இதில் காத்தான்குடியைச் சேர்ந்த தற்போதை அரச தலைவர் வேட்பாளர் ஹிஸ்புல்லாஹ் தோல்வி அடைந்தார். அன்று மகிந்த ராஜபக்சவுடன் இருந்து தோல்வி அடைந்த அவர் நாங்கள் உருவாக்கிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் சரணடைந்து அவரிடத்தில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக் கொண்ட தினத்தில் தம்முடைய ஆத்திரத்தை குண்டர்களை ஏவி அடாவடித் தனத்தை கட்டவிழ்த்து எம்முடைய கட்சிக்காரர்களைத் துன்புறுத்தி மிக மோசமான நடவடிக்கைகளை அங்கு அரங்கேற்றினார்.

அது மாத்திரமல்லாமல், பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தடுக்கப்பட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் உடனடியாக கட்சியின் தலைவன் என்ற வகையில் காத்தான்குடி சென்றேன். பாதிக்கப்பட்ட கட்சிக் காரார்ர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் அங்கு சென்றேன். பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்கப் போன இடத்திலே அங்கு குழுமியிருந்தவர்கள் மத்தியில் குறித்த பயங்கரவாதியும் கலந்து கொண்டிருந்திருக்கலாம். அது எனக்குத் தெரியாத விடயம். எனக்கும் அந்த பயங்கரவாதிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது.



இந்த நிலையில் வேண்டுமென்று இவ்வாறான பயங்கரவாதி ஒருவரையும் பிற்பட்ட நாள்களில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டவரையும் அகஸ்மாத்தாக இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலே இடையில் புகுந்து ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொண்ட பிற்பாடு என்னையும் சம்மந்தப்படுத்தி ப ங்கரவாதத்துக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாகக் காட்டுகின்ற விவகாரம் மிகவும் அபத்தமானது.

எனவே தங்களுடைய சொந்த சுய இலாப அரசியலுக்காக எதிர்த்தரப்பு ஊடகங்களைப் பாவித்து எம்மை வலுவிழக்க செய்ய விளைவது என்பது மிகபெரிய ஜனநாயக விரோத செயற்பாடு. இதை வன்மையாகக் கண்டிப்பது மாத்திரமல்ல இந்த செயற்பாட்டிலே நாங்கள் ஒரு போதும் இவ்வாறான பயங்கரவாதிகளை ஊக்குவிப்பவர்களாக இருந்ததில்லை. இனியும் இருக்கப்போவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார். (ம)



## முதியோர் தின நிகழ்வு

கொடிகாமம்,ஒக்.22

முதியோர் தின நிகழ்வு மறவன்புலவு சிவகவி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் யோ.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிருபா சாரதி பயிற்சி பாடசாலை அதிபர் அ.கிருபாகரன், சிறப்பு விருந்தி னர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான கு.குகானந்தன், அ.நிமலரோகன், தி.தங்கவேல், விவசாய சம்மேளனத்தின் தலைவர் க.திருஞானசம்பந்தர், கலைமாமணி து.மாணிக்கவாசகர், சிறுவர்கள் கிராம மக்கள் மூத்தோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

## யூதாததேயூ ஆலயத்திருவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்ப்பாண மறைமாவட்ட யாத்திரைத்தலமான அரியாலை புனித யூதாததேயூ ஆலயத்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை ஆராதனைகள் இடம்பெற்று, எதிர்வரும் 26ஆம் திகதி நற்கருணை ஆராதனையும், மறுநாள் ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி யும் நடைபெறும் என்று பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (க)



# கௌதாரிமுனை வளங்களை அபகரிக்க முயற்சி என்கிறார் சிறிதரன்

கிளிநொச்சி,ஒக்.22

பூநகரி கௌதாரிமுனைக் கிராமத்தில் இருக்கும் வளங்களை அபகரிக்க, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு, மக்களுக்கு அற்ப ஆசைகளைக் காட்டி மக்களைத் திசை திருப்ப பலர் முயற்சிப்பது கவலைக்குரியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

பூநகரி கௌதாரிமுனை மக்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர், கிராமத்தின் வளங்களையும் பார்வையிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தின் வளம் நிறைந்த அழகிய கிராமமாக கௌதாரி முனை திகழ்கின்றது. அதிக மண் வளம் நிறைந்ததாகவும், பூர்வீகக் கிராமமாக, மூவாயிரம் வருடங்களாக மக்கள் வாழ்ந்து வரும் இடமாகத் திகழ்கின்றது.

இங்கு பூர்வீக ஆலயமாக இருக்கும் மண்ணித்தலை சிவன் ஆலயம் இருப்பது கிராமத்துக்குப் பெருமை சேர்க்கின்றது. இங்கே 135 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது கிராமத்தில் இருக்கும் வளங்களை அபகரிக்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கை வளங்களில் மண் வளத்துக்குப் பெயர் பெற்ற இடமாக கௌதாரி முனை திகழ்கின்றது.

இந்த இயற்கை வளங்களை அபகரிப்பதற்கும், அதன் மூலம் கோடிக்கணக்கான வருமானங்களையும் உழைப்பதற்கும்,மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி இயற்கை வளங்களைச் சூரண்டும் எந்த ஒரு முயற்சிக்கும் நாம் இடமளிக்க கூடாது. கிராம மக்கள் , அமைப்புக்கள் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் என அனைவரும் இணைந்து எடுக்கும் திட்டங்களுக்கு நாம் ஒரு போதும் மறுப்பு தெரிவிப்பவர்கள் அல்லர்.

மாறாக ஒரு மாவட்டத்தின் ,கிராமத்தின் அழகையும் , இயற்கை வளத்தையும் இருப்பாகவும் கொண்டு அக்கிராமத்தின் தொன்மையும் வரலாற்றையும் பறைசாற்றி நிற்கின்ற விடயங்களில் நாம் அனைவரும் ஒற்றுமையாக பயணித்து அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உரித்துடையது.

இந்த விடயங்களை நாம் வெளிக் கொண்டு வர வேண்டும். ஊடகங்கள் இவ்வாறான விடயங்களை வெளிக் கொண்டு வர வேண்டு. சட்ட விரோதமான இயற்கை வளச்சுரண்டல்கள் ,வளங்கள் அபகரிக்கப்படும் திட்டங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும். ஒற்றுமையோடு எமது வளங்களைப் பாதுகாப்பதோடு ஒரு கிராமத்தின் இருப்பையும் அக்கிராமத்தின் தொன்மையையும் பாதுகாப்போம்-என்றார். (க-222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியாவில் விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம்

# சந்தேகநபர்கள் சார்பாக ஆட்கொணர்வுமனு தாக்கல்

கொழும்பு, ஒக். 22

தமிழீழவிடுதலைப்புலிகள்அமைப்பைமீளுருவாக்கம்செய்யமுற்பட்ட குற்றச்சாட்டில்மலேசியாவில்கைது செய்யப்பட்ட12 பேரில், 5 பேர் சார்பாக ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.



கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 5 சந்தேகநபர்களின் சட்டத்தரணி ராம்கர்பால் சிங் இதனைத் தெரிவித்துள்ளார்.
விடுதலைப் புலிகளை மீளுருவாக்கல், அவர்கள் சார்பில் பரப்புரைகளைமேற்கொள்ளல், விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கல் நோக்கிலான நிதிப் பரிமாற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து இரு அரசியல்வாதிகள் உட்பட 12 பேர் அண்மையக் காலங்களில் கைது செய்யப்பட்டனர்.
இந்த நிலையில், தடுப்பில் உள்ள எம்.குணசேகரன், ஜீ.சாமிநாதன், எஸ்.சந்துரு, வீ.சுரேஷ்குமார் மற்றும்எஸ்.அறிவைந்தன்ஆகியோர் சார்பில்ஆட்கொணர்வுமனுத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர்களின் சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஸஹ்ரானின்ஆதரவாளர்கள் சஜித்பிரேமதாசவின்பக்கம்

மகிந்த கடும் தாக்கல்

கொழும்பு, ஒக். 22

அடிப்படைவாதத்துக்குஉதவிவழங்கியசிலதலைவர்கள் தற்பொழுது அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.
அங்குணுகொலபெலஸ்ஸவில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றபரப்புரைக்கூட்டத்தில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவதில்லை. லட்சக்கணக்கானவர்களுக்குத்தொழில் இல்லை. இந்தநிலைமையைஏற்படுத்தியதுயார்? இதற்குப் பொறுப்புச்சொல்லவேண்டியதுயார்?ஸஹ்ரானா? அல்லது இந்த அரசா? அல்லது ஸஹ்ரானுக்கு ஆதரவு வழங்கிய அரசா? ஸஹ்ரானை கைது செய்யும் போது ஸஹ்ரானைக் காப்பாற்றியது இந்த அரசே. தற்பொழுது இந்த அரசின் அரச தலைவர் வேட்பாளருடன் தான் ஸஹ்ரான் ஆதரவாளர்கள் உள்ளனர். நாட்டிலுள்ள பாதுகாப்பு பிரதானிகளை சிறையில் அடைத்ததன் விளைவையே உயிர்த்தஞாயிறு தாக்குதலாக அனுபவிக்கநேர்ந்தது-என்றார். (ம)

## வடக்கு – கிழக்கு மக்கள் தேர்தலை புறக்கணிப்பர்

மகிந்த கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக். 22

வடக்கு-கிழக்குபிரதேசங்களில் சில தரப்பினர் இம்முறை அரச தலைவர் தேர்தலை புறக்கணிக்க உள்ளனர் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர்மகிந்தராஜபக்ச தெரிவித்தார்.
அம்பலந்தொட்ட ரிதியகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுமக்கள் முன்னணியின் பரப்புரைக்கூட்டத்தில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
மகிந்த மேலும் தெரிவித்ததாவது:
தற்பொழுது நாமல் ராஜபக்ச வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில்ஈடுபட்டுவருகின்றார். ஹம்பாந்தோட்ட மக்களுக்கு இந்த அரசுக்கு வாக்களிக்களந்தஉரிமையும் இல்லை. ஏனெனில், ஹம்பாந்தோட்டைக்கு இந்த அரசு எதனையும் செய்யவில்லை. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைவிற்பனைசெய்து பெற்றபணத்துக்குஎன்ன நடந்தது என்பதுகூட இது வரை யாருக்கும் தெரியவில்லை-என்றார். (ம)



## பதவி பறிப்புக்காக ஒருபோதும் வருந்தவில்லை

தேவப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கு எந்தவித குற்றத்தையும் செய்யாதவன் என்றவகையில், தனது பதவிகள் பறிபோனதற்கு கவலையில்லை என்று மேல் மாகாண முன்னாள் முதல மைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவி மற்றும் மஹரகமதொகுதிஅமைப்பாளர்பதவிஎன்பனதேசப்பிரியவிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளநிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எந்த அடிப்படையில் எனதுபதவிகள்பறிக்கப்பட்டன என்று தெரியாதுள்ளது.சிறிலங்காசுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டதை நான் ஒரு குற்றமாகக் கருதவில்லை என்றுஅவர் மேலும்தெரிவித்தார்.(ம)

## சந்திரிகாவுடன்இணைந்துபணியாற்றி சு.கவைப் பாதுகாக்க அதிரடித் திட்டம்

குமாரவெல்கம தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22



சிறிலங்காசுதந்திரக்கட்சியைப்பாதுகாப்பதற்காக எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பின்னிற்கப்போவதில்லையெனகளுத்துறைமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள்அரசதலைவர்சந்திரிகாபண்டாரநாயக்க குமாரணதுங்க வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியதும் சுதந்திரக் கட்சியைப்பாதுகாப்பதுதொடர்பில்பேச்சு நடத்தப்படும். அதனையடுத்து பெரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கப் போகின்றேன். சுதந்திரக் கட்சியினர் பலர் தற்போது பொதுமக்கள் முன்னணியுடன்இணைந்து செயற்படுகின்றனர். இதனால் சுதந்திரக் கட்சியின் தலைமையையும் ராஜபக்ஷ குடும்பத்தினர் உரிமையாக்கிக்கொள்ளலாம் என்ற சந்தேகமுள்ளது. இந்தநிலையில் கட்சியைப் பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார். (ம)

## இரத்திரணியல்ஊடகங்கள் பக்கச்சார்பான செயற்பாடு

மரிக்கார் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22



இலத்திரனியல் ஊடகங்கள் பக்கச்சார்பான முறையில்அரசதலைவர்தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனஎன்றுநாடாளுமன்றஉறுப்பினர்மரிக்கார் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலத்திரணியல்ஊடகங்கள்பக்கச்சார்பானமுறையில் அரச தலைவர் பரப்புரைகளை முன்னெடுக்கின்றன. ஐக்கியதேசியமுன்னணிசார்பில்தேர்தல்கள்ஆணைக் குழுவில் பல அறிக்கைகளை இது தொடர்பில் கையளித்துள்ளோம். இந்தசட்டவி[illegible] தலையிடுவதற்கு தேர்தல்கள் [illegible] அதிகாரம் காணப்படுகின்றது - என்றார். (ம)

## கோத்தாவின் பரப்புரையில் பங்கேற்கப் போவதில்லை!

தயாசிறி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 22

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின்தேர்தல்பரப்புரைக்கூட்டங்களில் கலந்து கொள்ளப்போவ தில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
இதுதொடர்பில்தயாசிறிமேலும்தெரிவித்ததாவது:
அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின்தேர்தல்பரப்புரைக்கூட்டங்களில்கலந்துகொள்ளும்சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள்சிறிலங்காபொதுமக்கள் [illegible] ஆதரவளர்களினால் [illegible]ங்களுக்கு உள்ளாகின்றனர்.
இந்த விடயம் குறித்து அந்த கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே இதற்கான தீர்வு வழங்கப்படும் வரை என்னால் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.
சுதந்திரக் கட்சியின் தனித்துவத் தன்மையை பாது காக்கும் வகையில் பொது மக்கள் முன்னணியின் கோத்த பாயவுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் மூலமாகவே நாம் அவருக்கு ஆதரவளித்துள்ளோம். ஆகவே இவ்வாறான அதிருப்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தவிர்த்துக் கொள்ள வேண்டியவை - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் கடத்தலில் ஈடுபட்ட ஐவருக்கு விளக்கமறியல்

மன்னார், ஒக். 22

இந்தியாவில் தங்கியிருந்த மூவரை சட்டபூர்வமற்ற முறையில் பாக்குநீர் கடல்பிராந்தியத்துக்கூடாக அழைத்து வர முயற்சித்தவர்கள் ஐவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மன்னார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழ் நாட்டில் தங்கியிருந்த மூன்று இலங்கையர்களை, குடிவரவு குடியகல்வுச் சட்டத்துக்குமாறாக தலைமன்னார் பாக்குநீர் கடலினூடாக படகொன்றின் மூலம் அழைத்து வருவதற்கு, இரு இலங்கை மீனவப் படகோட்டிகள் முயன்றுள்ளனர்.

இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையரான மானிப்பாயைச் சேர்ந்த இருவரும், மன்னாரைச் சேர்ந்த ஒருவரும் படகோட்டிகளான தலைமன்னாரைச் சேர்ந்த ஒருவரும் பேசாலையைச் சார்ந்த ஒருவரும் என ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் பேசாலை பகுதியிலுள்ள படகு ஒன்றில் இவர்கள் அழைத்து வரப்பட்ட போது, பேசாலைக் கடற்கரையிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை தலைமன்னார் கடற்படையினர் கைது செய்தனர். ஐவரும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஐவரையும் தலைமன்னார் பொலிஸார், மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவுபிறப்பித்தார். (க-60)

# இடியுடனான மழை இனியும் தொடரும்

கொழும்பு, ஒக். 22

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் இடியுடன்கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் தற்போதும் உயர்வாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், மற்றும் தென் மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் கரையோரப் பகுதிகளில் காலை வேளையிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 தொடக்கம் 100 மில்லி மீற்றர் அளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும். காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்- என்றுள்ளது. (ம)




# தேல்தல் வன்முறை உருவாக ஏதுநிலை

கொழும்பு, ஒக். 22

தேர்தல் மேடைகளில் ஆவேசமான பேச்சுக்கள் மற்றும் இனவாதத்தை தூண்டும் அறிவிப்புக்கள் என்பன அதிகரித்து வருவதாகவும் இந்த நிலமை நீண்டு சென்றால் வன்முறைகள் வெடிக்கக் கூடும் எனவும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அறி வித்துள்ளது.

இது தொடர்பில் கபே அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ச மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் மேடைகளில் ஆவேசமான பேச்சுக்கள் மற்றும் இனவாதத்தை தூண்டும் அறிவிப்புக்கள் என்பன அதிகரித்து வருகின்றன. கபே அமைப்பானது, அரச தலைவர் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்கு தனியான ஒரு பிரிவை நிறுவியுள்ளது. அதனூடாக இந்த தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. தேர்தல் களத்தைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றோம் -என்றார். (ம)

# குமார வெல்கம வீட்டில் நேற்றுமுன்தினம் திருட்டு

கொழும்பு, ஒக். 22

அளுத்கம களுவாமோதர பிரதேசத்தில் அமைந்துள்ள களுத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் வீட்டில் நேற்றுமுன்தினம் திருட்டு போயுள்ளதாக அளுத்கமப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலுள்ள அறையொன்றின் யன்னல் வழியாக வீட்டுக்குள் சென்று திருடிய திருடன், அந்த யன்னல் வழியாகவே தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நடைபெறும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் வெல்கம உட்பட வீட்டவர்கள் எவரும் வீட்டில் இருக்கவில்லையெனவும் கூறப்படுகின்றது.

குறித்த நபர் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த வந்தாரா என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ம)

# கடல் பாதுகாப்பு மாநாடு கொழும்பில் ஆரம்பமானது

கொழும்பு, ஒக். 22

இலங்கை கடற்படை ஆண்டு தோறும் நடத்தும், 'காலி கலந்துரையாடல்' என்னும், கடல் பாதுகாப்பு மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமானது. கொழும்பு கோல்பேஸ் விடுதியில் நேற்று ஆரம்பமான இந்த மாநாடு இன்று வரையில் தொடர்ந்து இடம்பெறும்.

இந்த மாநாட்டில் 55 நாடுகள், 10 அனைத்துலக அமைப்புகள், 3 பாதுகாப்பு தொழில்துறைகள் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இது இலங்கைக் கடற்படை நடத்தும், 10ஆவது மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்த மாநாட்டில் பங்கேற்கும், அனைத்துலக கடற்படைப் பிரதிநிதிகள், இலங்கைக் கடற்படையின் சித்திர வதை முகாம்கள் தொடர்பாக நடக்கின்ற விசாரணைகளுக்கு, கடற்படை ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும் என, அனைத்துலக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் யஸ்மின் சூகா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

# சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியவர்தான் சஜித்

## அமைச்சர் ரிசாத் முழக்கம்

கொழும்பு, ஒக். 22

சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய சிறந்த தலைவரென்றால் அது சஜித் பிரேம தாசவே. எனவே அவருக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

சம்பாந்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


'நாங்கள் எதிர்நோக்க இருக்கின்ற இந்த அரச தலைவர் தேர்தலானது, முக்கிய இரு வேட்பாளர்களான புதிய ஜனநாயக முன்னனியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் [illegible] முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகிய இருவரில் ஒருவரை அரச தலைவராகத் தெரிவு செய்யும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இதில் இனவாதங்களை களையெடுக்கக்கூடிய குறிப்பாக முஸ்லிம் மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய வேட்பாளரான சஜித் பிரேமதாசவையே ஆதரிக்க வேண்டும். இங்கு நாம், எம்முடைய முஸ்லிம் பிரதிநிதிகளிடம் காணப்படுகின்ற வெறுப்புக்களை மறந்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்புக்காக ஒன்று திரள வேண்டிய நிலையில் காணப்படுகின்றோம்.

கோத்தபாய ராஜபக்ச வந்தால் முஸ்லிம் சமூகம் அச்சத்துடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும். இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆவதுடன் பர்மாவைப் போன்று (மியன்மாரை) இலங்கையும் மாறிவிடும். இன்று பணத்துக்காகவும் பயத்தாலும் பல முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்கின்ற நிலையைக் காணலாம். கடந்த ஏப்ரல் 21 இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து என்மீது பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி, என்னையும் அந்த பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புபடுத்தி இந்த பேரினவாத சக்திகள் என்னை கைது செய்யுமாறு கோரின. இதனையடுத்து என்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் போலியானவை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எங்களுடைய சமுதாயத்திற்காக எங்கள் தலைகளையும் அர்ப்பணம் செய்ய நாங்கள் தயாராக உள்ளோம்-என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியில் சிறுபான்மையினருக்கு இருப்பில்லை

## கிழக்கின் முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட் இடித்துரைப்பு



கொழும்பு, ஒக். 22

இந்த நாட்டில் கோத்தபாயவின் ஆட்சி இடம்பெறுமாயின் சிறுபான்மையினர் நிம்மதியாக வாழ முடியாது என்பதுதான் முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவாகும் எனக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்கள் உயிருக்கு அஞ்சி வயற்காடுகளுக்குள் மறைந்து வாழ்கின்ற ஒரு சமூகமாக இருக்க முடியாது. முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும். ஜனநாயகத்தையும் அமைதியையும் விரும்பும் பெரும்பாலான மக்கள் சஜித் பிரேமதாசவுக்கே வாக்களிப்பார்கள்.

அதுதான் யதார்த்தம். தமிழ் சமூகம் எவ்வாறு அடக்கி ஆளப்பட்டதோ அதைவிட மிக மோசமான முறையில் முஸ்லிம் சமூகத்தை அடக்கி ஆளவேண்டும் என இனவாதக் கூட்டம் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது. இதைத்தான் வெலிகம, பேருவளை, களுத்துறை, கண்டி, திகன மற்றும் அம்பாறையில் என பல்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த இனவாத துரோகக் கும்பலை எதிர்வருகின்ற அரச தலைவர் தேர்தலில் நாம் ஒரு அணியாக நின்று முறியடிக்க வேண்டும்.

எமது வாழ்வு, இருப்பு, தனித்துவம், மனித உரிமை போன்ற அனைத்தையும் குழிதோண்டிப் புதைக்குமளவுக்கு அச்சமும் பயமும் பீதியும் குடிகொண்டவர்களாக நாம் நடுங்கிக் கொண்டிருந்தோம்.

அந்த நிலைமை தொடர்ந்தும் இந்த நாட்டில் இருக்கக்கூடாது. வெற்றி பெறக்கூடிய வேட்பாளரை இன்று களத்துக்குக் கொண்டு வந்த பெருமை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கிறது.

கடந்த காலங்களில் பிரேமதாசவை, சந்திரிகாவை ஆதரித்துப் பல சாதனைகள் புரிந்திருக்கிறோம். அதே வேளை சிறுபான்மையினருக்கெதிரான மகிந்த ராஜபக்சவின் அராஜகத்தைத் தோற்கடிப்பதிலும் நாம் முன்நின்றோம்.

ஆகவே, நாம் எடுத்த முடிவுகள் ஒருபோதும் கைசேதப்படக் கூடியதல்ல.

எனவே, இந்த சமூகப் பணியில் நாம் அனைவரும் தனித்துவம், ஜனநாயகம், எதிர்காலம், வாழ்வு இருப்பு, நிம்மதி எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு உறுதியாக சிறுபான்மையினரை அனுசரித்து ஆட்சி செய்யக்கூடிய சஜித்தை ஆதரித்து அரச தலைவராக்க வேண்டும் - என்றார். (ம)

# அரச தலைவர் தேர்தலில் இராணுவத்தினர் நடுநிலை

## தேர்தல் ஆணைக்குழுவின் விருப்பம் இது

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் இராணுவம் நடுநிலையாகச் செயற்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

அரசதலைவர் தேர்தலில் போட்டியிடும் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக, இராணுவத் தளபதியின் ஒளிப்படம் மற்றும் கருத்துக்களுடன், தேர்தல் விளம்பரங்கள் வெளியிடப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறு கூறியுள்ளது. (ம)

# கூட்டமைப்பின் கோரிக்கைகளை முழுவதுமாக நிராகரிக்கின்றோம்



கொழும்பு, ஒக். 22

அரசதலைவர் வேட்பாளர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகளை முற்றாக நிராகரிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புமுன்வைத்துள்ளகோரிக்கைகளை முற்றாக நிராகரிப்பதே சிறிலங்காப் பொதுமக்கள் முன்னணியின் நிலைப்பாடு. எதிர்த் தரப்பு வேட்பாளர்களும் அதே விதமான நிலைப்பாட்டையே வெளிப்படுத்த வேண்டும் -என்றார். (ம)

# களுத்துறையில் இருவர் கொலை

கொழும்பு, ஒக். 22

களுத்துறை - அகலவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

அகலவத்தை கிரிவானகெட்டியவில் உள்ள வீடொன்றிலேயே கணவன், மனைவியான உயிரிழந்தவர்களின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# துமிந்தவுக்கு பதவியுயர்வு!

கொழும்பு, ஒக். 22

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்தப் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாபாவிடம் காணப்பட்டது.

இவர் தற்பொழுது பொதுமக்கள் முன்னணியுடன் இதற்குப் புதிதாகத் துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென கூட்டப்பட்ட நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஏற்கனவே, சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போலி நுழைவிசைவு காரணமாக

# திருப்பி அனுப்பப்பட்டனர் சிரிய நாட்டு தம்பதியினர்

ஐக்கிய அரபு அமீரகத்தின் கடவுச்சீட்டைப் போலியாக தயார் செய்து இலங்கைக்குள் பிரவேசிக்க முற்பட்ட சிரிய நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். 29 வயதுடைய பல் வைத்தியர் ஒருவரும், 28 வயதுடைய அவருடைய மனைவியுமே இவ்வாறு வருகை தந்துள்ளனர். தாம் வருகை தந்ததன் நோக்கம் சுற்றுலாவுக்கு எனத் தெரிவித்துள்ளனர். இவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தின் கடவுச் சீட்டைக் கையில் வைத்திருந்துள்ளனர். இவர்களது பொதிகளை சோதனையிட்ட போது அதில் சிரிய நாட்டுக்கான கடவுச் சீட்டுக்கள் காணப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம)

# வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரின் வாகனம் கைவிடப்பட்ட நிலமையில்

யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் பயன்படுத்திய வாகனம் விபத்தில் சிக்கி முற்றாக சிதைவடைந்து கைவிடப்படும் நிலமையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கு 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதன் முதலாக தேர்தல் இடம்பெற்று சபை ஆரம்பிக்கப்பட்டபோது, 5 அமைச்சர்களுக்கும் புதிதாக வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் அமைச்சர்களின் பாவனையில் இருந்த நிலையில் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதியுடன் முதலாவது மாகாண சபையின் ஆட்சிக்காலம் நிறைவுற்றது.

இவ்வாறு ஆட்சிக்காலம் நிறைவுற்ற சமயம் சகல அமைச்சர்களும் தமது பாவனையில் இருந்த வாகனங்களை முதன்மைச் செயலர் மற்றும் அமைச்சுக்களில் கையளித்திருந்தனர்.

இந்த நிலையில் முதலமைச்சர் பயன்படுத்திய வாகனம் மாநகர முதல்வர் ஆனல்ட்டின் பயன்பாட்டுக்கும், முன்னாள் சுகாதார அமைச்சர் பயன்படுத்திய வாகனம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலரின் பயன்பாட்டுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மாகாண சபையின் பயன்பாட்டு வாகனம் மாநகர முதல்வருக்கு வழங்கியதை ஒரு குடாநாட்டு அரசியல்வாதி அரச தலைவரின் காதுக்குக் கொண்டு சென்று அதனை மீளப்பெற வைத்தார்.

இந்த நிலையில் மாகாண கல்வி அமைச்சின் செயலரின் பாவனையில் இருந்த வாகனம் கடந்த 17ஆம் திகதி மருதனார்மடப் பகுதியில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக முழுமையாக அழிவடைந்து மீளப் பயன்படுத்த முடியாத நிலமைக்குச் சென்றுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண முதன்மைச் செயலர் அ.பத்திநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வடக்கு மாகாண அமைச்சர்கள் பயன்படுத்திய அனைத்து வாகனங்களும் கோரிக்கையின் பெயரில் ஆளுநரிடம் எம்மால் கையளிக்கப்பட்டன. அவை தற்போது எனது நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லை - என்றார். (க-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் உரிமைகளுக்காக சஜித் ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஒக்.22

பெண்களின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கிலான கொள்கைகள் மற்றும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செயற்றிட்டங்கள் அடங்கிய சமூக ஒப்பந்தம் ஒன்றில் புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச கைச்சாத்திட்டார்.



புதிய ஜனநாயக முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வு நேற்றுக் கொழும்பு சுகதாச உள்ளரங்கில் நடைபெற்றது.

பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் தேவைகளை உறுதிப் படுத்துவது தொடர்பான கொள்கைகள் மற்றும் அவற்றுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் அடங்கிய சமூக ஒப்பந்தத்தில் அனைவருக்கும் முன்பாக சஜித் பிரேமதாச ஒப்பமிட்டார்.

அவர் ஒப்பமிட்ட சமூக ஒப்பந்தம் சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க பெண் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது

நாட்டில் சுமார் 12 இலட்சம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவர்களின் துன்பங்களைப் போக்குதல், அவர்களை வன்முறைகள் மற்றும் துஸ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல் என்பவற்றுக்கான செயற்திட்டங்களை உருவாக்குவோம்.

எமது புதிய அரசில் பாலின அசமத்துவத்தைப் போக்கி, அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சம இடத்தைப் பெறக்கூடியதொரு நிலையைக் கட்டியெழுப்புவோம். அதற்குரிய திட்டத்தை நான் அரச தலைவராகப் பதவியேற்றதைத் தொடர்ந்துவரும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்துவேன் - என்றார். (எ)

# இந்தியாவின் சொல் கேட்டே தமிழ்க் கட்சிகள் உடன்பாடு

## கஜேந்திரகுமார் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக்.22



இந்தியாவின் சொல்லைக் கேட்டுத் தான் 5 தமிழ்க் கட்சிகளும் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இட்டார்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த வாரம் பல்கலைக் கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் தொடர்பில் சில விட யங்களைக் கூற வேண்டும். கொள்கை அளவில்தான் கோரிக்கைகள் அடங்கிய ஒப்பந்தத்தில் அந்த 5 கட்சிகளும் அண்மையில் கையெழுத்து இட்டன. புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று நாம் கேட்டதற்கு அவர்கள் அதை மறுத்துக் கூட்டத்தில் இருந்து எம்மை வெளியேற்ற முனைந்ததைக் காண கூடியதாக இருந்தது.

இந்த ஐந்து கட்சிகளும் போருக்குப் பின்னர் எந்தக் கொள்கைகளை நிராகரித்து வந்தார்களோ, அதை ஏற்றுத் தற்போது கையெழுத்து இட்டு உள்ளார்கள். தேசம் என்ற கோட்பாட்டைத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நிராகரித்தது மட்டுமல்லாது அதைக் கிண்டல் செய்துள்ளது. இனப் படுகொலைத் தீர்மானம் எல்லாவற்றையும் அவர்கள் நிராகரித்தார்கள். கூட்டமைப்பு மட்டும் இல்லை அதிலிருந்து பிரிந்த விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அனைவரும் நிராகரித்துள்ளனர். தமிழர்களுக்கான இறைமை என்பதையும் அவர்கள் நிராகரித்து வந்தார்கள்.

வெறுமனே தேர்தலுக்காகத் தான் அவர்கள் கையெழுத்திட்டார்கள் என்று கூறிவிட முடியாது. இந்தியா கொடுத்த ஆலோசனையின்படியே அவர்கள் அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டார்கள். வரப்போகும் தேர்தல் வெறுமனே சஜித்துக்கும், கோத்தபாயவுக்கும் இடையே கட்சிகளுக்கு இடையே நடைபெறும் தேர்தல் அல்ல என்று நாம் பல தடவைகள் கூறியுள்ளோம். கோத்தபாய சீனாவுக்கும், சஜித் இந்திய மற்றும் மேற்கு நாடுகளுக்கும் சார்பானவர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அந்த 5 கட்சிகளும் இந்தியாவின் முகவர்கள் என்பதையும் அனைவரும் அறிவார்கள். தமிழ் மக்களின் நலன்களைக் கருதி இந்த 5 கட்சிகளும் செயற்பட தயாராக இல்லை என்பதை இந்தச் செயற்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது.

கோத்தபாய ராஜபக்ச ஒரு கொடூரமனா நபர் என்பதில் சந்தேகம் இல்லை. சஜித்தும் அவ்வாறான கொடூரங்களை ஆட்சிக்கு வந்தால் செய்வார் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. வேட்பாளர்கள் மத்தியில் எந்த இடைவெளியும் கிடையாது என்பதை அறிந்து மக்கள் செயற்பட வேண்டும் -என்றார். (எ-7)

# ஆட்சிக்கு வந்ததும் ராணுவத்துக்கு நியாயம் வழங்குவாராம் கோத்தா

கொழும்பு, ஒக்.22

பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவி னருக்கும் நாம் ஆட்சிக்கு வந்தவுடன் நியாயம் வழங்கப்படும். அவர்கள் கௌரவிக்கப்படுவார் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.

பெலியத்த நகரில் நேற்று நடத்திய பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தேவைகளுக்காகவும், பன்னாட்டு அமைப்புக்களை திருப்திப்படுத்தவும் இராணுவத்தினரையும், புலனாய்வுப் பிரிவினரையும் அரசு பழிவாங்கியது. போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரை பன்னாட்டு நீதிமன்றில் குற்றவாளிகளாக நிறுத்துவதற்கான மார்க்கத்தை அரசு ஏற்படுத்திக் கொடுத்தது.

பாதுகாப்பு அமைச்சின் இலக்கு தேசிய பாதுகாப்பை விடுத்து அரசியல் மயப்பட்டதை அடிப்படை வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமது இலக்கை வெற்றி கொண்டார்கள்.

தற்போது தேசிய பாதுகாப்புக் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இராணுவ நுட்பமும், தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எந்த அறிவும் இல்லாத அமைச்சரவையைக் கொண்டுள்ள அரசால் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த முடியாது. இராணுவ நுட்பம் அறிந்த எம்மால் மட்டுமே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த முடியும் - என்றார். (எ)

# புலிகளின் கோரிக்கையை விட கட்சிகள் கேட்பவை அதிகமாம்

## இப்படிக் கூறுகிறார் ரோகித

கொழும்பு, ஒக்.22

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் முன்வைத்த கோரிக்கைகளைக் காட்டிலும், பாரதூரமான கோரிக்கைகளைத் தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ளன என்று கூறியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டைப் பிளவுபடுத்தும் விடயங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் ஏதுமின்றி மறுப்புத் தெரிவித்துள்ளோம். தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பாக ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் நிலைப்பாடு என்ன என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தனி ஈழம் வேண்டும் என்றே விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் ஆயுதமேந்தி 30 ஆண்டுகள் போராடினார். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டது. அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளைக் காட்டிலும் பாரதூரமான கோரிக்கைகளையே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்து ள்ளன.

நாடு என்ற ரீதியில் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நாட்டுக்குள் தீவிரவாதச் செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்குவதற்கு எந்தத் தரப்பினரும் விருப்பம் கொள்வது கிடையாது - என்றார். (எ)

# சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தியது சந்திரிகாவே

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.22

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்திப் புதிய கட்சியை ஏற்படுத்தியது சந்திரிகா குமாரதுங்கவே. நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் துண்டாடவில்லை. நாமும் அந்தக் கட்சியின் பங்காளிகளே. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு, அகுனுகொலபெலஸ்சவில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் அலுவலகத் திறப்பு நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சிறிலங்கா சுதந்திர கட்சி எமது தாய் வீடு. பண்டார நாயக்கவும், டீ.ஏ.ராஜ பக்சவும் இணைந்து ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறி அதை உருவாக்கினர். அதனால் நாங்கள் சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஒரு பகுதியினர். எமக்குள் இருக்கும் வித்தியாசம், நாங்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையாதமையாகும். சிறிலங்கா சுதந்திர கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்திருப்பதால் நாங்கள் சக்திமிக்க கட்சியாக மாறி இருக்கின்றோம்.

சிறிலங்கா சுதந்திர கட்சியை ஆரம்பமாக துண்டாக்கி புதிய கட்சி ஒன்றை ஏற்படுத்தியது நாங்கள் அல்ல. சந்திரிகாவும் விஜேகுமாரதுங்குவுமே. சிறிலங்கா சுதந்திர கட்சியை துண்டாக்கியே மஹஜன கட்சியை அமைத்தனர். ஆனால் நாங்கள் கட்சியை துண்டாக்கிக் கொண்டு செல்லவில்லை.

ஏப்ரல் 5 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான அனைத்து தகவல்களும் அடங்கிய கடிதம் இந்த அரசுக்கு கிடைத்தது. ஆனால் அரசு தூங்கிக் கொண்டிருந்தது. புலனாய்வுப் பிரிவினர்களை சிறைப்படுத்தியமையே இந்த நிலைக்கு காரணமாகும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, ஒக்.22

பலத்த மழையுடனான வானிலையால் பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தப்போவ நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகளும் கலாவெவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகளும், இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. அதனால் கலாவெவ நீர்த்தேக்கத்தின் தாழ்நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகளும் தெதுருஓயாவின் 4 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் குருநாகல் பகுதியிலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. குருநாகலில் 132.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள அதேநேரம், குறித்த காலப் பகுதிக்குள் ஆனமடுவ பகுதியில் 99.8 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலையால் கேகாலை, இரத்தினபுரி, மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொட பலாங்கொடை, இம்புல்பே மற்றும் ஓப்பநாயக்க பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்கும் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் மூத்த புவிசரிதவியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என மண்சரிவு ஆய்வுப் பிரிவின் மூத்த புவிசரிதவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை பெய்த மழையினால் கொழும்பு - கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மழை காரணமாக புத்தளம், அநுராதபுரம் வீதிக்கு அருகில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் உந்துருளியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, வடக்கின் பல பகுதிகளிலும் நேற்று மழை பெய்துவருகின்றது. (எ)

# பதவிக்காலம் முடிவதற்குள் தூக்கை நிறைவேற்றுவேன்

## அரச தலைவர் மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்குச் சாதகமாக நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்தால் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஒருவருக்கேனும் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹில்டன் விடுதியில் நேற்றுமுன்தினம் நடந்த தேசிய இளைஞர் மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போதைப் பொருளிலிருந்து நாட்டின் இளைஞர் தலைமுறையை மீட்பதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தூக்குத் தண்டனையை வழங்குவதற்கு தீர்மானித்தபோதும் அதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்குத் தீர்ப்புக்குத் தலை சாய்க்க வேண்டியுள்ளது.

சிலவேளை போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்குவதற்கு சார்பாக வழக்குத் தீர்ப்பு கிடைத்தால் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் இந்த நாட்டின் இளைஞர்களுக்காக ஒரு போதைப்பொருள் கடத்தல்காரருக்கேனும் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

ஊடக சுதந்திரம் அதிகபட்சம் உறுதி செய்யப்பட்டிருந்த கடந்த யுகத்தில் அதிகம் விமர்சனங்களுக்கு உள்ளானவன் நான்தான் என்றபோதும், எவற்றுக்கும் நான் எதிர்ப்பை வெளியிடவில்லை. நாட்டின் இளைஞர்கள் ஊடக சுதந்திரத்தை அதிகளவு அனுபவித்து வருகின்றனர்.

இளைஞர்களை வலுவூட்டுவதற்காகவும் அவர்களுக்கான சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் எனது ஆட்சிக்காலத்தில் முக்கியமான பல பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இளைஞர்கள் அரசியலுக்கு வருவதாயின் அவர்கள் கல்விப் பின்புலத்தை கொண்டிருக்க வேண்டும். முன்னுதாரணமான ஆளுமைகளாக இருக்க வேண்டும். கற்றவர்கள் உள்ள நாட்டில் பிரச்சினைகள் குறைவடையும். அந்தநாடு அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும். அரச நிர்வாகமும் நல்லாட்சியாக காணப்படும் - என்றார். (எ)

# கோத்தபாயவுக்கு ஆதரவாக முன்னாள் படைத்தளபதிகள்

கொழும்பு, ஒக்.22

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் பரப்புரை நடவடிக்கைகளுக்காக முன்னாள் படைத் தளபதிகள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராக இருந்த காலகட்டத்தில், இறுதிக்கட்டப் போர் நடந்து கொண்டிருந்த - போருக்குப் பின்னரான கால கட்டத்தில் அவருடன் இணைந்து பணியாற்றிய யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதிகளாக இருந்த, இரண்டு மேஜர் ஜெனரல்கள், தேர்தல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஜிஏ.சந்திரசிறி மற்றும் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோரே யாழ். குடாநாட்டில் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும், 2005ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 7 ஆண்டுகள் யாழ். படைகளின் தலைமையகட்டளை அதிகாரிகளாக செயற்பட்டவர்களாவர். மேஜர் ஜெனரல் ஜிஏ. சந்திரசிறி அதற்குப் பின்னர் வடக்கு மாகாண ஆளுநராகவும் 2015 ஆட்சி மாற்றம்வரை பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதிகளாக இருந்த காலத்தில், கொண்டிருந்த தொடர்புகள், மூலங்களைக் கொண்டு கோத்தாய ராஜபக்சவுக்கு ஆதரவான பரப்புரைகளை இவர்கள் முன்னெத்து வருகின்றனர். மேஜர் ஜெனரல் ஜிஏ.சந்திரசிறி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், கூட்டங்களை நடத்தி வருகிறார். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி, கோத்தாய ராஜபக்சவை நாட்டின் அரச தலைவராக்குவதற்கு யாழ்ப்பாண மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

# வானூர்தி நிலையங்களால் கட்சிகளிடையே விவாதம்!

கொழும்பு, ஒக்.22

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் மற்றும் மத்தல பன்னாட்டு வானூர்தி நிலையம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியினரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியினரும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த இரு கட்சியினரும் வானூர்தித் தளங்கள் தொடர்பான வாக்குவாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மத்தல பன்னாட்டு வானூர்தி நிலையம் அமைக்கப்பட்டது. தற்போது யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மட்டுமே சீரமைக்கப்பட்டது. அங்கு வானூர்திச் சேவைகள் இடம்பெற்றிருந்த நிலையில் இந்தச் சீரமைப்பு நடத்தது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள மத்தல வானூர்தி நிலையத்துக்கு அண்மையில் சரணாலயம் மற்றும் காட்டுப் பகுதியே காணப்படுகின்றது. இந்த வானூர்தி நிலையம் இப்போது அவசர தரையிறக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வானூர்திஅருகில் உள்ள பெரிய நகரம் மாத்தறை. இது 2.5 மணிநேர தூரத்தில் உள்ளது. குறிப்பாக முழு மாவட்டமும் கிராமப் புறத்தைக் கொண்டது என்பதால் வானூர்திப் போக்குவரத்துக்கான அவசியம் பெரிதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருக்கும் மக்கள், விமானப் போக்குவரத்துக்காக அங்கிருந்து கொழும்புக்கு 8 மணி நேரங்கள் பயணிக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது. அத்துடன் வடக்குக்கும் தென் இந்தியாவுக்கும் இடையில் ஆழமான தொடர்புகள் உள்ளன. அதனால் யாழ்ப்பாண விமான நிலையம் அமைக்கப்பட்டமை மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

இருப்பினும் திறக்கப்பட்ட சில நாள்களுக்குப் பின்னர், விமான நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது. ஆனால் எதிர்க்கட்சியினர் தற்போது விமான நிலையம் தரமானதாக இல்லை என்று கூறி வருகின்றனர்.

சீரற்ற வானிலை காரணமாக தற்போது இந்தியாவில் உள்ள கொச்சி விமான நிலையம், சென்னை விமான நிலையங்கள் கூட வெள்ளத்தில் மூழ்கின என்றும் மறு தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவ கலாசாரத்தில் இருந்தவரால் ஜனநாயகத்தை பின்பற்ற முடியாது

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு

இராணுவ கலாசாரத்துக்குப் பழக்கப்பட்ட ஒருவருக்கு ஜனநாயக கலாசாரத்தைப் பின்பற்றுவது கடினமாகும். நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒருவருக்கு நாம் உரிய மதிப்பையும், மரியாதையையும் வழங்க முடியுமே தவிர நாட்டை ஒப்படைக்க முடியாது.

இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதன் பின்னர் பெருமளவில் இனவாத மோதல்கள் ஏற்பட்டன. அப்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாரிய சேவையாற்றியுள்ளார். அந்த சேவையை ஒருநாளும் எம்மால் மறக்க முடியாது. அதனால் சஜித் அரசில் அவர் பாதுகாப்பு அமைச்சராக செயற்படுவதில் எவ்வித சிக்கலும் கிடையாது -என்றார். (ஏ)

---

### நீதிமன்றில்...

முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தாக்கல் செய்திருந்த நீதிமன்ற அவமதிப்பு மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்று இந்தக் கட்டளையைப் பிறப்பித்தது.

முல்லைத்தீவு, நீராவியடியில் சர்ச்சைக்குரிய வகையில் விகாரை அமைத்துத் தங்கியிருந்த பிக்கு உயிரிழந்த நிலையில் அவரது உடலை அங்கு தகனம் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. அருகில் பிள்ளையார் ஆலயம் உள்ள நிலையில் ஆலய நிர்வாகத்தின் இது தொடர்பாக நீதிமன்றை நாடினர். ஆலய வளாகத்தில் தேரரின் உடலைத் தகனம் செய்யக் கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று கட்டளை பிறப்பித்தது. எதிர்த் திசையில் உள்ள இராணுவ முகாமின் பின்பாகவுள்ள கடல்கரையோரம் தகனம் செய்ய இரு தரப்பின் இணக்கம் பெறப்பட்டது. எனினும் அதை மீறிப் பிக்குவின் உடல் பிள்ளையார் ஆலயத் தீர்த்தக் கேணி அருகே தகனம் செய்யப்பட்டது. கொழும்பில் இருந்து வந்திருந்த ஞானசாரர் தேரர் தலைமையிலான பிக்குகள் அடங்கிய குழுவினரே உடலைத் தகனம் செய்தனர். அதைத் தடுக்காது பொலிஸார் வேடிக்கை பார்த்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச் சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி நடந்தது.

நீதிமன்றக் கட்டளையை அவமதித்த ஞானசார தேரர், முல்லைத்தீவு மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் தலைமையக அதிகாரி ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரது சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் விசாரிக்கத் தகுந்தது என்றும், ஞானசார தேரர் உட்பட 3 எதிர் மனுதாரர்களுக்கும் நீதிமன்றில் தோன்றுமாறு அறிவித்தல் அனுப்பக் கட்டளையிட்ட மேன்முறையீட்டு நீதிமன்று வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ஏ-105)

### தனிமையில்...

புண்ணியானந்தம் சந்திராதேவி (வயது -61) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திராதேவி வீட்டில் தனித்தே வாழ்ந்து வந்துள்ளார். அவருக்கு 3 பிள்ளைகள். ஒருவர் வெளிநாட்டிலும் மற்றையவர் வெளிநாட்டிலும் வசிக்கின்றனர். ஒருவர் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து தனியாக உள்ளார்.

நேற்றுக் காலை பால் கொண்டு சென்ற ஒருவர் வீட்டில் நாய்களும், காகங்களும் கூடியிருப்பதைக் கண்டு சென்று பார்த்தபோது சந்திராதேவி உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குவந்துவிசாரணைகளை மேற்கொண்டனர்.

சந்திராதேவி அணிந்திருந்த சங்கிலி, காப்பு, தோடு என்பவை காணாமல் போயுள்ளன. அவற்றைக் கொள்ளையிடுவதற்காகவே அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 5 பவுண் நகைகள் காணாமல் போயுள்ளன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

சந்திராதேவியின் கழுத்துக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டுள்ளது. அவரது உடலில் காயம் ஒன்று காணப்படுகின்றது. அது தீயால் சூட்டதால் ஏற்பட்டிக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மோப்பநாய் கொண்டுவரப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்திலுள்ள ஓரிடத்தில் மோப்ப நாய் சென்று படுத்தது. அந்த இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் நின்றார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்ததை அடுத்து அது தொடர்பான விசாரணைகளும் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்குச் சென்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிபதி அ.பீற்றர் போல் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி உ.மயூரன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உடற்கூற்றுச் சோதனைக்காக உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் விசாரணைகளைத் தொடர்கின்றனர். (ஏ-26,37)

### கோத்தா...

என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச மீது கொலைக் குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பலவிதமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இப்படிப்பட்டவருக்கா தமிழர்கள் வாக்களிப்பார்கள்?

ராஜபக்ச குடும்பமானது குடும்ப ஆட்சியூடாக மீண்டும் சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கவே விரும்புகின்றது. அதனால்தான் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக ராஜபக்ச குடும்பம் களமிறக்கியுள்ளது. இது தமிழ்க் கட்சிகளுக்கு நன்கு தெரியும். எனவே, தமிழ்க் கட்சிகள் கோத்தபாயவை ஆதரிக்க முடிவெடுக்கமாட்டார்கள்.

கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும். அதில் சந்தேகப்படத் தேவையில்லை. அதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வை வழங்குவதே எனது இலக்காகும். தமிழ், முஸ்லிம் மக்கள் என்னை நம்பி ஆதரிக்க வேண்டும். அவர்கள் தங்கள் வாக்குகளை எனக்கு வழங்க வேண்டும்-என்றார். (ஏ-22)

### வானூர்தி...

திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நீரைக் கடலில் விடுவதைத் தடுத்துச் சிறப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இராணுவத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அந்தப் பகுதியில் நீர்த் தேக்கம் ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாக அயலில் உள்ள கிராமங்களுக்கும் தொடர்ச்சியாக நீர் கிடைக்கும், வானூர்தித் தளத்துக்கும் குடிதண்ணீர் பாவனை தவிர்ந்த ஏனைய பாவனைகளுக்கு அந்த நீரைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை மாவட்டச் செயலாளர், சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையினர் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் நன்மைகள் கிடைக்கும் என்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-105)

### தேர்தலை...

கையில் ஈடுபடவுள்ளனர் என்று கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் தெரிவித்தார்.

ஆசிய, ஐரோப்பிய மற்றும் பொதுநலவாய அமைப்புகளின் கண்காணிப்பாளர்களும் வரவுள்ளனர். மறுபுறத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் கண்காணிப்பாளர்களை நிறுத்தவுள்ளது. (ஏ-22)

### தமிழ்...

யின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கின் தமிழ்த் தரப்பு 13 கோரிக்கைகளை அரச தலைவர் வேட்பாளர்களிடம் முன்வைத்துள்ளனர். அதில் வடக்கு, கிழக்கை இணைக்கும் கோரிக்கைக்கு நாம் இணங்கவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம். ஆகவே அதை எமக்குத் தாருங்கள் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. கிழக்கில் முஸ்லிம் மக்கள் அதிகமாகவும், சிங்களவர்கள் ஓரளவும் வாழ்கின்றனர். திருகோணமலையை எடுத்துக்கொண்டாலும் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கு சிங்களவர்கள் வாழ்கின்றனர். அவர்களை நிராகரித்து வடக்கு, கிழக்கைத் தனி அலகாக அங்கீகரிக்க முடியாது.

எனினும், தமிழர் தரப்பு முன்வைத்த பல கோரிக்கைகள் நியாயமானவையாக உள்ளன. அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவை. வடக்கில் தனியார் நிலங்களை மீண்டும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமானது. இப்போது இவ்வாறான மோசமான சட்டம் தேவையில்லை. அதேபோல் இப்போது கொண்டுவரும் சட்டமும் மோசமானது. அதை நாமும் எதிர்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தமிழ்க் கட்சிகளின் 13 கோரிக்கைகளில் பிரதான காரணிகளுடன் நாம் முரண்படவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கு இணைப்பு மாத்திரம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை-என்றார். (ஏ-22)

### கூட்டமைப்பு...

பக்சவை ஆதரித்துப் பெலியத்தையில் நேற்று திங்கட் கிழமை நடத்திய பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்து இன்றுடன் 6 மாதங்களாகி விட்டன. தேசிய பாதுகாப்புத் தொடர்பாக இந்த அரசுக்கு ஒரு தெளிவான கொள்கையில்லை. நாம் ஆட்சிக்கு வந்தால் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்திட்டங்களை வகுப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்தமைக்கு இந்த அரசே முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும். எல்லாத் தகவல்களும் இருந்தும் முறையான புலனாய்வுக் கட்டமைப்பும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாத காரணத்தால் அந்தத் தாக்குதலை நடத்தவிட்டு பார்த்துக் கொண்டிருந்தது அரசு.

நாங்கள் நாட்டின் பொறுப்பை ஏற்றால் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கான பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சி அரசு, அமைச்சரவை ஆகியன ஏற்க வேண்டும்.

ஏப்ரல் 5 ஆம் திகதி ஒரு அறிவிப்பு வந்தது. தாக்குதல்தாரிகளின் பெயர்கள், தாக்கப்படும் இடங்கள், தாக்கப்படும் நேரம் என்பன குறித்து அதில் சொல்லப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள்கூட இது தொடர்பாக எச்சரித்திருந்தனர். ஆனால் அரசு எதனையும் கண்டுகொள்ளவில்லை.


மதவழிபாட்டுத் தலங்களுக்குக் கூடச் செல்ல முடியாமல் போனது. இதனால்தான் நாங்கள் கோத்தபாயவை அரச தலைவராக்கிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோருகின்றோம்.

அரச தலைவர் தேர்தலுக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனைகளை முன்வைக்கவுள்ளதாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த நிபந்தனையையும் நாங்கள் ஏற்கமாட்டோம். எமக்கு நாடும் நாட்டின் இறையாண்மையும் முக்கியம். எந்த நிபந்தனையும் இதுவரை எம்மிடம் முன்வைக்கப்படவில்லை. அப்படி முன்வைக்க வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் நாட்டைப் பேரம் பேசும் எந்தக் கோரிக்கையையும் நாங்கள் ஏற்கத் தயாரில்லை. அதனை இப்போதே சொல்லி விடுகின்றேன்-என்றார். (ஏ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்குள் அத்துமீறி இந்தியா இராணுவம் தாக்குதல்

## பாகிஸ்தான் சிப்பாய்கள் சாவு



புதுடெல்லி,ஒக்.22
ஜம்மு காஷ்மீரின் தாங்தார் பிரிவைத் தாண்டிப் பாகிஸ்தான் நிர்வாகத்தில் உள்ள காஷ்மீரில் செயற்பட்டுவந்த நான்கு தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் தொடுத்துள்ளதாக இந்திய இராணுவத் தரப்பை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நிர்வாகத்தின் கீழுள்ள காஷ்மீரில் உள்ள குறித்த தீவிரவாத முகாம்கள் மீது இந்திய இராணுவம் ஆட்லரித் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இந்தத் தாக்குதலில் பத்துப் பாகிஸ்தான் இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் மூன்று பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன என்றும் இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்தார்.
காஷ்மீரின் சிறப்பு அரசமைப்பை இந்தியா நீக்கிய பின்னர் அங்கு அமைதியைச் சீர்குலைக்கும் நோக்கில் பயங்கரவாதிகள் ஊடுருவுகின்றனர் என்று கூறியே இந்திய இராணுவம் இந்தத் தாக்குதலை நடத்தியது.

# ஈராக்குக்கு விரைகின்றன அமெரிக்கத் துருப்புகள்!



வோஷிங்டன்,ஒக்.22
சிரியாவின் வடபகுதியிலிருந்து திரும்பப்பெறப்பட்ட அமெரிக்கத் துருப்புகள் அங்கிருந்து புறப்பட்டு ஈராக்கின் மேற்குப் பகுதிக்குச் செல்ல இருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர் தெரிவித்தார்.
புதியதொரு திட்டத்தின்படி ஏறத்தாழ ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் வரை ஐ.எஸ் அமைப்பின் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக ஈராக்குக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று எஸ்பர் மேலும் கூறினார்.
அமெரிக்கத் துருப்புகள் அனைத்தும் நாடு திரும்பும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறி இருந்த நிலையில் அவை ஈராக்குக்குச் செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னிந்தியாவில் கடும் மழை

தமிழகம்,ஒக்.22
தென்னிந்தியாவின் தமிழ் நாடு முழுவதும் கடும் மழை பெய்துவருகிறது.
இதனால் தமிழகத்தில் உள்ள அணைகள் நிரம்பி வருகின்றன.
கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து தொடர்ந்து பெய்து வருகின்ற இந்த மழையால் கோயம்புத்தூர், சிவகங்கை, கன்னியாகுமரி மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் அங்குள்ள அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

# எந்த முகாமையும் இந்தியா தாக்கவில்லை

## மறுப்புத் தெரிவிக்கிறது பாகிஸ்தான்



இஸ்லாமாபாத்,ஒக்.22
பாகிஸ்தானின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் உள்ள எந்த முகாமையும் இந்திய இராணுவம் தாக்கவில்லை. இந்திய இராணுவம் கூறுவது பொய்யானது என்று பாகிஸ்தான் இராணுவம் மறுப்புத் தெரிவித்தது. பாகிஸ்தான் பகுதிக்குள் இந்திய இராணுவம் பீரங்கி மூலமும், சிறிய ரக ரொக்கெட் லாஞ்சர்கள் மூலமும் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் பாகிஸ்தான் பகுதியிலிருந்த 3 முகாம்கள் அழிக்கப்பட்டன என்றும் பாகிஸ்தானின் இராணுவச் சிப்பாய்கள் 10 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும் இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்தார்.
இது குறித்துப் பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித்தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஆசிப் கபூர் கூறுகையில், 'இந்திய இராணுவத் தளபதி ராணுவத்தின் கூற்று வேதனையளிக்கிறது. பாகிஸ்தானின் காஷ்மீர் பகுதியில் 3 முகாம்களை இந்திய இராணுவம் அழித்ததாகக் கூறுகிறார்கள். உள்நாட்டில் சில நலன்களுக்காகவும், அரசியல் இலாபத்துக்காகவும் இதுபோன்ற பொய்யான தகவல்களை இந்திய இராணுவம் கூறுகிறது -என்றார்.



# எகிப்திய அகழ்வாய்வில் பழங்காலச் சவப்பெட்டிகள்!

கெய்ரோ,ஒக்.22
எகிப்தின் லக்சார் நகருக்கு அருகேயுள்ள பகுதியில் மரத்தாலான 20 சவப்பெட்டிகளை அகழ்வாராய்ச்சிக் குழு ஒன்று கண்டுபிடித்தது. இந்தப் பெட்டிகள் நைல் நதியின் மேற்குக் கரையில் இருக்கும் தீபன் நெக்ரொபொலிஸில் கண்டறியப்பட்டுள்ளன.
ஒன்றன் மீது ஒன்றாக இரண்டு அடுக்குகள் கொண்டுள்ள இந்தப் பெட்டிகள் மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் குறித்தும், அதன் மூலமாக மக்கள் குறித்தும் புரிந்து கொள்ள இவை உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சவப் பெட்டிகளுடன் இந்தப் பகுதியில் சேமிப்புக்கான வீடு மற்றும் 18 ஆம் சாம்ராஜ்யத்தின் நாள்கள் குறிக்கப்பட்ட பானைகளும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தீபன் நெக்ரோபோலிஸில் இருக்கும் இந்த அசாசிவ்பில் சமாதிகள் பெரும்பாலும் கிமு 664-332 காலத்தில் வாழ்ந்த மன்னர்களுடன் தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

# மிகப் பழமையான முத்து அபுதாபியில் கண்டெடுப்பு!



அபுதாபி,ஒக்.22
8ஆயிரம் ஆண்டுகள் பழமையான முத்து ஒன்று அபுதாபியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் காட்சிக்கு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய அரபு இராச்சியத்தின் கலாச்சார மற்றும் சுற்றுலா [illegible] அறிக்கையில் [illegible] ருப்பதாவது:
8ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த முத்தின் அடுக்குகள் கி.மு 5800-5600 காலகட்டத்தைச் சேர்ந்தவை என்று கண்டறியப்பட்டுள்ளது.
அபுதாபியில் கண்டெடுக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பழமையான முத்தான [illegible] மற்றும் கலாச்சார வரலாற்றின் [illegible]ான வேர்களைக் கொண்டுள்ளது. புகழ்பெற்ற பாரிஸ் அருங்காட்சியகத்தின் புறக்காவல் நிலையமான லூவ்ரே அபுதாபியில் அன்று 10 ஆயிரம் ஆண்டுக் கால விலைமதிப்பற்ற பழமையான கலைப்பொருட்களுக்கான கண்காட்சி திறக்கப்பட உள்ளது. அதில் இந்த உலகின் பழமையான அபுதாபி முத்தும் காட்சிக்கு வைக்கப்படும் என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலியில் போராட்டம்

*10 பேர் சாவு*

சண்டியாகோ,ஒக்.22
மத்திய அமெரிக்க நாடான சிலியில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் 10பேர் சாவடைந்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது: அதிவேகத் தொடருந்துக் கட்டணத்தை 800 முதல் 830 சிலி பெசோக்கள் வரை அந்த நாட்டு அரசு உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடந்த வெள்ளிக்கிழமை சிலியின் சண்டியாகோ மற்றும் பிற நகரங்களில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்கு இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர். ஏராளமான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து நடந்த வன்முறையை அடக்குவதற்கு இராணுவத்தினர் நீர்ப் பீரங்கிகளைப் பயன்படுத்தினர். போராட்டங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 10 சாவடைந்தனர். தொடர்ந்து சிலியில் போராட்டமும், வன்முறையும் நீடிப்பதால் அங்கு பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மிரட்டுகின்றன 2 புயல்கள் அச்சத்தில் ஜப்பான் மக்கள்


டோக்கியோ,ஒக்.22
ஜப்பானை அண்மையில் தாக்கிய ஹபிகிஸ் புயல் ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து இன்னும் மீளாத நிலையில், மேலும் இரண்டு புயல்கள் ஜப்பானை நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. 'நியோகுரி' எனப் பெயரிடப்பட்டுள்ள முதலாவது புயல் ஜப்பானின் டோக்கியோ நகரின் தெற்கு மற்றும் தென்மேற்குக் கடற்கரை பகுதிகளில் இன்று கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது மணிக்கு 162 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கடுத்து 'புலாய்' எனப் பெயரிடப்பட்டுள்ள இரண்டாவது புயல் எதிர்வரும் வரும் 26ஆம் திகதி ஜப்பானின் தெற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் கரையை கடக்கும் எனவும், இது 180 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்தது. ஹபிகிஸ் புயல் ஏற்படுத்திய விளைவுகளையே இன்னும் சரிசெய்யாத நிலையில் மேலும் இரண்டு புயல்கள் நெருங்கி வருவதால் ஜப்பான் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.







அதிவேகத் தொடருந்துக் கட்டணத்தை உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சிலியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைக் கலைக்கின்றனர் படையினர். அது குறித்த ஒளிப்படத் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமொன்று.

## இன்றைய நாள்

**மேடம்:** எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலங் களை கவனமுடன் பாதுகாக்கவும். திட்டமிட்டதில் அதிக பணச்செலவு ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை உதவும்.

**இடபம்:** உயர்ந்த செயல்களால் நற்பெயர் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரத்தில் தேவையான அபிவிருத்தி பணிபுரிவீர்கள்.

**மிதுனம்:** பணிகளில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அக்கறையுடன் செயல்பட வேண்டும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

**கடகம்:** உங்கள் செயல் திறமையை முழு அளவில் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**சிம்மம்:** முக்கிய செயலை ஆர்வமுடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** பணிகளில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். உபரி பணவரவில் சேமிப்பு கூடும். மனைவி அன்பு, பாசத்துடன் குடும்ப நலன் பேணுவார். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** மிகுந்த மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். சிறிய முயற்சியும் அதிக நன்மையை தரும். தொழிலில் அபிவிருத்தி செய்ய தகுந்த பணவசதி கிடைக்கும்.

**விருச்சிகம்:** சிலரது அவசியமற்ற பேச்சு சங்கடம் உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பொறுமையுடன் செயல்படுவது அவசியம். தொழில் சார்ந்த குறையை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** பணிகளை நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். மனதில் நிம்மதியும், பெருமிதமும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**கும்பம்:** பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். புதியவர்களின் ஆதரவில் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. குடும்ப உறுப்பினர் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். அளவான பணவரவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.22
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட 20 வயதுப் பிரிவு பாடசாலை கூடைப்பந்தாட்ட ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது,

பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக் குமரன் விளையாட்டு கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாத்மா ஜி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வர விளையாட்டுக்கழக அணி மோவுள்ளது. (23)



# கிண்ணம் வென்றது ஞானமுருகன் வி.க.

யாழ்ப்பாணம்,ஒக்.22
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதற் பாதி ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியின் முதலாவது கோலை ஜெகன் பதிவு செய்ய முதற்பாதி ஆட்ட முடிவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் எந்தவித கோல்களும் பதிவு செய்யாத நிலையில் ஆட்ட நேர முடிவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்ற பெற்றது. (23)



# சொக்ஸ் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக்.22
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக புளுஸ் அணி மோதியது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணி 67:57 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணி வீரர் கிசாந் தெரிவானார் .தொடராட்ட நாயகனாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக புளுஸ் அணி வீரர் சங்கீர்த்தனன் தெரிவானார். (23)

# ரிசபாவுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22
தேசிய பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளு தூக்கும் போட்டியில் பெண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவி செ.ரிசபாவுக்கும் மற்றும் அவருக்கு பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப் பிள்ளையார் ஆலய 'கற்பகா' அறநெறிப் பாடசாலையில் நடைபெற்றது.

மதிப்பளிக்கும் நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவி உள்ளிட்ட முதன்மை விருந்தினர்கள், பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச.சத்தியசீலன், அலைகல்லுபோட்டகுளம் அ.த.க.பாடசாலை அதிபர் பாஸ்கரன் சாந்தகுமாரி, இத்திமடு அ.த.க.பாடசாலை அதிபர் இராசகுமாரி, தண்டுவான் அ.த.க.பாடசாலை அதிபர் கு.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி3- 222)







அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் துரைச்சாமி மகேஸ்வரி, அமரர் கோவிந்தபிள்ளை இராசமணி ஞாபகார்த்தமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண், பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கால்பந்தாட்ட அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம்.ஒக்.22
45ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் வடக்கு மாகாண கால்பந்தாட்ட அணி அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

பதுளை வின்சனெட் விளையாட்டு மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல்மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

இதில் வடக்கு மாகாண அணி சார்பாக ஞானரூபன் 3 கோல்களையும், சாந்தன் 2 கோல்களையும், கலிஸ்ரர், ஜெயராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பதிவு செய்தனர்.



## மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்.ஒக்.22
பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம்.3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள இலங்கை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளன வளவாளர் குழுவினரால் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி முகாமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கு பற்றவிரும்பும் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்கள், பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (422)



## குத்துச்சண்டைப் போட்டியில் ஹட்லிக்கு இரு பதக்கங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.22
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டை போட்டியில் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி மாணவர்கள் ஓர் தங்கப் பதக்கம், ஓர் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர்.

கண்டி நாவலப்பிட்டி உள்ளகவிளையாட்டரங்கில் இடம்பெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி மாணவன் வி.சானுசன் 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் 75:81 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், எஸ். அஜேய் 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப்போட்டியில்50:54 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

### பொலே- ஒன் முறையிலும்

# தென்னாபிரிக்கா பரிதாப நிலையில்



தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் 2 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது. 3ஆவது டெஸ்ட் போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

முதல் நாள் ஆட்டத்தின் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்கள் பெற்ற போது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி வீரர்களான ரோகித் சர்மா தனது இரட்டைச் சதத்தை பூர்த்தி செய்தார். அவருக்கு இணையான ரஹானேயும் நீண்ட நாள்களின் பின்னர் சதத்தைப் பூத்தி செய்ய அணி முதல் இன்னிங்ஸில் 9 இலக்குகளை இழந்து 497 ஓட்டங்களைக் குவித்தது. தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 2 இலக்குகளை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஹம்சா, டீ குக் நேற்றைய மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். இதில் தென்னாபிரிக்கா அணி 162 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் பொலோ-ஒன் முறை வழங்கப்பட்டது. தென்னாபிரிக்கா அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கியது. அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள்ளேயே 5 இலக்குகளை இழந்தது. இந்திய பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் தென்னாபிரிக்கா அணி வீரர்கள் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்திய அணியின் பந்து வீச்சாளர்களான சமி, யாதவ் தென்னாபிரிக்க அணியின் இலக்குகளை அடுத்தடுத்து சரித்த வண்ணமிருந்தனர். நேற்றைய நாள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 8 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. பேர்னி 30 ஓட்டங்களுடனும், நோர்ரேஜ் 5 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். தென்னாபிரிக்கா அணிக்கு பொலோ - ஒன் முறையில் இன்னும் 2 இலக்குகள் கைவசமிருக்க 202 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## போட்டிகளை புறக்கணித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷ் அணியை முன்னேற்றுவது தொடர்பான தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை பன்னாட்டுப் போட்டிகளை புறக்கணிப்பது என பங்களாதேஷ் அணி வீரர்கள் தீர்மானித்துள்ளனர்.

பங்களாதேஷ் அணி வீரர்களின் இந்தக் கோரிக்கை காரணமாக இந்தியாவுக்கான அடுத்த மாத சுற்றுப் பயணம் கேள்விக்குறியாகியுள்ளது.

பங்களாதேஷ் அணியின் மூத்த வீரர்கள் மாநாட்டில் இதனை அறிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

அனைத்து முதல்தர போட்டிகளையும் புறக்கணிக்க தீர்மானித்துள்ளோம்.

பன்னாட்டுப் போட்டிகளுக்கான தேசிய அணியின் பயிற்சிகளும் கைவிடப்படும்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாங்கள் சமர்ப்பித்த 11அம்சக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் வழமையான நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

நாங்கள் அனைவரும் கிரிக்கெட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்றே கோரிக்கை விடுக்கின்றோம். எங்களில் சிலர் நான்கைந்து வருடங்களுக்கும் ஏனைய சிலர் பத்து வருடங்களுக்கும் விளையாடக்கூடும். எங்களுக்கு பின்னர் விளையாட வரும் வீரர்களுக்கு நல்ல சூழலை ஏற்படுத்த வேண்டும் அதன் காரணமாக பங்களாதேஷ் கிரிக்கெட் முன்னோக்கி நகரும் - என்றனர்.

### அதிக முறை பொலோ- ஒன் கொடுத்த அணித் தலைவர்

# விராட் கோக்லி புதிய சாதனை

3ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா அணியை குறைந்த ஓட்டங்களில் சுருட்டி பொலோ-ஒன் கொடுத்ததன் மூலம் இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இடம்பெற்று வருகின்றது. முதலில் துடுப்பெடுத்தாடி இந்திய அணி 9 இலக்குகளை இழந்து 497 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி [illegible] இதனால் [illegible] இதன்மூலம் 8ஆவது முறையாக எதிரணியை தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதனால் அதிக முறை பொலோ-ஒன் கொடுத்த இந்திய அணித் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றார். [illegible] அசாருதீன் 7 முறையும், டோனி 5 முறையும், கங்குலி 4 முறையும் பொலோ-ஒன் கொடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 768
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.21
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,588,445/-
வெற்றி இலக்கங்கள்
07 34 42 48 L
விசேட வெற்றி இல.
2930

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3251
திகதி: 2019.10.21
திங்கட்கிழமை
நீலம்
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
போனஸ் இலக்கம்
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
05 09 65 74 V 25 65,970,070/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1061
சீட்டிழுப்பு திகதி 2019.10.20 ஞாயிற்றுக்கிழமை
R 17 38 44 58
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 510
திகதி: 2019 ஒக்டோ. 20
வர்ணம்: மஞ்சள்
ஞாயிறு
Z 03 18 42 51
8 8 7 1 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 144,422,833/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



*100 பந்து கிரிக்கெட் தொடர்;*

# கெய்ல்,ரபாடா,மலிங்க ஏலத்தில் எடுபடவில்லை

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 100 பந்து கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் கிறிஸ் கெய்ல், ரபாடா மலிங்கவை எடுக்க எந்த அணியும் ஆர்வம் காட்டவில்லை.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையால் 100 பந்து கிரிக்கெட் தொடர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொடர் அடுத்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடருக்கான ஏலம் நேற்றுமுன்தினம் நடை[illegible]து. இதில் ஆப்கான் சுழற்பந்து வீச்சாளர் ரஷித [illegible]ன ஏலம் எடுக்க 8 அணிகளும் போட்டியிட்ட[illegible]றுதியில் டிரென்ட் ராக்கெட்ஸ் அணி அவ[illegible]ம் எடுத்தது.


ஆனால் கிறிஸ் கெய்லை எந்த அணியும் ஏலம் எடுக்க ஆர்வம் காட்டவில்லை. அதேபோல் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க ஆகியோரையும் எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை.

ஏசியன் தளபாட நிலையத்தின்
மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| 6x3 கண்ணாடி அலுமாரி | 13900/= | 11150/= |
| 6x3 மர அலுமாரி | 27000/= | 18900/= |
| மெத்தை (Double layer) Single (6x3) | 3750/= | 3100/= |
| மெத்தை Double (6x4) | 4890/= | 4050/= |
| பிரம்பு செட் (4கதிரை+ ரீப்போ) | 17000/= | 15350/= |
| பிளாஸ்ரிக் கதிரை செட் (6கதிரை+ ரீப்போ) | 5400/= | 4650/= |
| Stand Fan | 4500/= | 3740/= |
| Panasonic TV-32" Free DVD Player | 32000/= | 28000/= |

இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்
076 821 9416, 076 821 9418
Facebook - Asian Furniture, Jaffna

அமெரிக்க லொத்தர் இலவச வீசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960



## காதலியை கரம் பிடித்தார் நடால்

பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால், தனது 14 வருட காதலி மேரி பெரெல்லாவை திருமணம் செய்துகொண்டார்.

ஸ்பெயினை சேர்ந்த பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இவர் மேரி பெரேல்லா என்ற தனது பாடசாலை தோழியை காதலித்து வந்தார். நடால் கலந்து கொள்ளும் போட்டிகளுக்கு வந்து, அவரை உற்சாகப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் மேரி பெரேல்லா.

இந்த நிலையில் இவர்கள் திருமண நிச்சயதார்த்தம் கடந்த வருடம் மே மாதம் நடந்ததாகக் கூறப்பட்டது. இந்த நிலையில் இவர்கள் திருமணம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஸ்பெயினில் நடந்த இந்ததிருமணத்தில் பிரபல ரென்னிஸ் வீரர்கள், வீராங்கனைகள் என சுமார் 350 விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

விற்பனைக்கு
தரமான சீமெந்துக் கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.
076 760 3066, 075 039 1980

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21.10.2019
வெற்றி வாரம் 2654
வர்ணம் மஞ்சள்
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்
02 16 20 53
செவ்வாய் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 713, 970/=
22.10.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை ...சிகப்பு... நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்



திருமதி **கந்தசாமி நாகேசுவரி**

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ஏழாலை மகாவித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகேசுவரி நேற்று (21.10.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வுபெற்ற கணக்காய்வுப் பரீட்சகர் . மற்றும் முன்னாள் விவேகானந்தாசபைச் செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சபாரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் கனகசபாபதி, காலஞ்சென்ற அம்பிகாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2019) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 272 4486 தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை அதிபர்)



தோற்றம் 04.05.1954 மறைவு 20.10.2019

கறுக்காய்த்தீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) கடந்த (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், சடாச்சரம், சரஸ்வதி, நாகநாதர், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, வள்ளிப்பிள்ளை, மனோன்மணி, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நித்தியானந்தன், விக்னேஸ்வரன், சத்தீஸ்வரன், ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கார்த்திகா (சுவிஸ்), நிஷாந்தினி (ஆசிரியர் - நல்லூர் ம.வி), கஜேந்திரயேன் (கணக்காளர் - வடமாகாண அஞ்சல் திணைக்களம்), தணிகா (கால்நடை, போதனாசிரியர் - பூநகரி), பானுஜன் (விஞ்ஞானப் பிரிவு மாணவன்- பூநகரி ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினகுமாரி (சுவிஸ்), பிரகாஸ் (இ.போ.சபை), உதயரேகா (கிராம அபிவிருத்தித் திணைக்களம்) ஆகியோரின் மாமனும், குருபரன், யதுர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நிரந்தர முகவரியான கறுக்காய்த்தீவு பூநகரியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (23.10.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சூரிய தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கறுக்காய்த்தீவு, பூநகரி. தகவல் : குடும்பத்தினர்.

0771386977 (cs.28856) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.